Reg. No. M. 3066 1938 அக்டோபர் 1.

"PAHUTHARIVU"
(REASON)

மலர் 4. இதழ் 6.

# பகுத்தறிவு

தனிப்பிரதி
விலை ரூ 0—1—6

# பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற்பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6. தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருட பைண்டு வால்யூம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும்போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

**விஷய அட்டவணை பக்கம்.**


பண்டைக்கால கோவில் வழிபாடு (பி. சிதம்பரம் பிள்ளை B A & B L, M. L A) 3
தமிழ்நாடு தமிழருக்கே 10
பூ தோற்றம் (ஆர். மெக்மிலன்) 14
அறிவுத் துணுக்கு (என். கே. பி. முத்துராஜா) 17
சத்தியின் பெருமை (ஜியார்ஜ் ஆர். ஹாரிஸன்) 27
கொக்கிப் புழு 31
தமிழர்த் தகவுரை (பாட்டு) 34
அபேதவாதமும், சமூக சீர்திருத்தமும் (C. N. A) 38
பயிரைத் தாக்கும் பூச்சிகள் 47
பிரான்சின் பாதாளக்கோட்டை 52
மதமும் மன்னனும் (ஜீ. மெலவியர்) 5
பூமி சாஸ்திரிகள் வரலாறு (சார்லஸ் டி. கோர்ஹாம்) 81

# பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 4. } ஈரோடு 1938 அக்டோபர் 1. { இதழ் 6.

## கனவில் காதலன்.

(நீலாம்பாள்)

(பாரதிதாசனின் "தென்னைமரத்தில்" என்ற மெட்டு)

நந்தவனத்தில்—குளிர்
மாலைப்போதில்—மலர்
வனப்பிடைபோக்கிய விழியையும் மனத்தையும்
மீட்கும் திறனின்றியே
நின்று இருந்தேன்—அவன்
அங்கு உதித்தான்—தன்
இன்ப உருவாலும் அன்பு மொழியாலும்
என்னையடிமை கொண்டான்!

கட்டியணைத்து—அந்தக்
கன்னல் மொழியான்—அழகுக்
கணந்தனிலே ஓராயிர முத்தமென்
கன்னத்திலிட்டு விட்டான்!

முத்தம் பொழிந்த—அந்த
உத்தமன் தனக்கு—என்றன்
முத்தமழையையும் வருஷிக்க எண்ணினேன்
வாய் குவித்தேன் ஆனால்—

அன்புருக்கொண்டு—என்னை
அணைத்துமே நின்ற—அந்தப்
பங்கயற்கண்ணனைக் காண்கிலன்—காண்கிலன்
கனவாய் முடிந்ததுவே!
கனவினில்வந்து—என்றன்
கருத்தைப்பறித்துச்—சென்ற
காதற்கள் வனை கட்டியணைத்து நான்
களிப்புறும் நாள் எதுவோ?

---

உன் குழந்தைகள் பொய் சொன்னால், உலகமே பாழாகிப் போவதாக எண்ணி, அதன் மேல் சீறி விழாதே. குழந்தைகளிடம் நேர்மையாக நட. மூர்க்க குணமுடைய தந்தைக்குப் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் பொய்யர்களாகவே இருப்பார்கள். இது இயற்கை விதி! மக்களாய்ப்பிறந்த ஒவ்வொருவரும் இவ்வுண்மையை அறிந்திருக்க வேண்டும். பெற்றோர் கொடுமைக்குப் பயந்தே மனவலியற்ற குழந்தைகள் பொய் சொல்லப் புகுகின்றன. குழந்தைகளைத் திட்டினால்—அடித்தால் அவை பொய் சொல்லத்தான் செய்யும்.

—இங்கர்சால்

* * *

"நானே குடும்பத்துக்குத் தலைவன்; வீட்டுக்கு முதலாளி" என்று கூறுபவனை நான் அறவே வெறுக்கிறேன். "நானே தலைவன்; நானே அதிகாரி" எனக் கூற ஒருவனுக்கு என்ன உரிமை?

—இங்கர்சால்

# பண்டைக்கால கோவில் வழிபாடு.

P. சிதம்பரம்பிள்ளை, B. A., & B. L., M. L. A.

இந்தியாவிலுள்ள பண்டைக்காலக்கோவில் ஒவ்வொன்றும், வழிபடுகிறவர்களிடமிருந்து காணிக்கையாக ஏராளமான பொருளை இக்கோவில் மூலம் வசூலிக்கலாமென எதிர்பார்த்த அரசர்களாலேயே ஸ்தாபிக்கப்பட்டதாகும். இதைத்தவிர மதசம்பந்தமான குறிக்கோளுடனோ, அன்றி மோட்சத்தை உத்தேசித்தோ ஸ்தாபிக்கப்படவில்லை. இது பொருள் தேடுவதற்குரிய அரசியல் தந்திரங்களில் ஒன்றாகும். இக்கொள்கை மனுஸ்மிருதிக்கு முன்னிருந்தே கைக்கொள்ளப்பட்டு வருவதாகும். இக்காலத்தும், அரசாங்கத்தார் அனுமதியின்றிக் குடி ஜனங்கள் கோவில் கட்டக்கூடாது என்ற முறையானது இந்திய சுதேச சமஸ்தானங்களில் கைக்கொள்ளப்பட்டு வருவதைக் காணலாம். இதிலிருந்து, முன்காலத்தில், ஆலயம் கட்டும் அதிகாரம் அரசர்களுக்கு மட்டுமே உரித்தாயிருந்தது என்பது வெளியாகின்றது.

இன்றைக்கு இரண்டாயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன் கௌடிலியர் அல்லது சாணக்கியர் என்ற பெயருடன் விளங்கிய பார்ப்பனப் பெரியாரைக் கவனிப்போம். "இவர் அரசர்களை ஆக்கவும் அழிக்கவும் திறம்படைத்திருந்ததுமன்றி, அரசாங்கப் பரிபாலன முறையைப்பற்றியும், மன்னர்கள், மந்திரிகள், உத்தியோகஸ்தர்கள் இவர்களுடைய கடமைகளைப்பற்றியும் விளக்கிய மிகப்பெரிய இந்தியப் பண்டிதராகவும் திகழ்ந்தார்." இவரியற்றியுள்ள சாணக்கிய சூத்திரம் அல்லது "அர்த்த சாஸ்திரம்" மனு யக்ஞவல்கிய ஆகிய ஸ்மிருதிகளின் காலத்திற்கும் முற்பட்டதாகும்.

சாணக்கியரது 'ராஜ தந்திர'த்தைப்பற்றி அபிப்பிராயங்கள் எவ்வாறு கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆலய வழிபாட்டைப் பொறுத்தமட்டிலும் அவர் உண்மையையே

விளம்பியிருக்கின்றார் என்பது அவரது அர்த்த சாஸ்திரத்திலுள்ள அடியிற் கண்ட சுலோகங்களினின்றும் தெளிவாகும்:-

"மத ஸ்தானங்களை மேற்பார்வை செய்யும் அரசாங்க அதிகாரி, கோட்டை கொத்தலங்களுள்ள நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள தெய்வங்களுக்குச் சொந்தமான பலவித சொத்துக்களையும் ஓரிடத்தில் சேகரித்து, அரசரது பொக்கிஷத்திற்குக் கொண்டுபோய்விடலாம்".

"அன்றியும், ஓரிரவு ஒரு தெய்வத்தையோ, பீடத்தையோ, மடத்தையோ, ஏற்படுத்தவேண்டியது; அல்லது ஒரு கெட்ட சகுனத்தைக்காட்டி (தீமைகள் நேரிடாவண்ணம் தடுக்கும்பொருட்டு) திருவிழாக்களும்கூட்டங்களும் நடத்துவதாகப் பாசாங்குசெய்து பொதுஜனங்களிடமிருந்து அரசரது செலவுக்காகப்பணம் வசூலிக்கலாம்"

அரசருடைய செலவுகட்காகப் பணம் திரட்டும் விநோதமானவழிகளை இன்னும் பார்ப்போம்.

"ஒரு மரத்தில் பிசாசு தோன்றிவிட்டதாக முதலாவது பொதுஜனங்களிடையே பீதியை உண்டுபண்ணிவிடவேண்டும். இந்த மரத்துக்குள் ஒருவனை நுழையச்செய்து பயங்கரமான பேய்க்கூச்சலிடும்படியாக அரசன் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த துஷ்ட தேவதையைச் சாந்தப்படுத்தி அனுப்பாவிட்டால் நகரத்துக்குப் பெருங்கேடு விளையுமென்று ஜனங்கள் நம்பி, அதைச் சாந்தப்படுத்த அவர்கள் முயலும்படி செய்யவேண்டும். அரசரது ஒற்றர்கள் சந்நியாசிகள் மாதிரி வேடம் பூண்டு இந்தத் தந்திரத்தைச் செய்து பணத்தை வசூலிக்க வேண்டியது." பிசாசு நகரத்தைவிட்டுப் போய்விடுகிறது; பணம் அரசரது பொக்கிஷத்தைச் சேருகிறது. அந்தக் காலத்தில் அரசனுக்குப் பணம் தேடிக் கொடுக்கும் வேலை, அதிகாரிகளுக்கு கடுமையான வேலையாகவே இருந்திருக்க வேண்டும்.

பாம்பைக் காட்டிப் பணம்பறிக்கும் தந்திரம் இதைவிட விசித்திரமானது; இது இன்றுங்கூடச் சிறிது மாற்றத்துடன் —ஒரு கோவிலிலாவது—இருந்துவருவதாகத் தெரிகிறது. சாணக்கியர் காலத்தில் 'தீர்த்தம்' எவ்வாறு பயன்படுத்தப் பட்டிருக்குமென்பதை எளிதாக உணர்ந்துகொள்ளலாம். சாதாரணமாக எளிதில் இம்மாதிரி விஷயங்களை நம்பாத

மக்களிடத்தில்தான் இந்த 'தீர்த்தம்' உபயோகிக்கப்பட்டது. இதை அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் 'மருந்'தாக உபயோகித்தார்கள். ஆனால், இந்த தந்திரங்களையெல்லாம் அரசருடைய காரியத்துக்காக உபயோகித்தார்களேயன்றி இன்று நடப்பதுபோல ஒரு சிலருடைய சுயநல வாழ்வுக்காகவன்று என்பதை ஞாபகத்திலிருத்திக்கொள்ளவேண்டும். தந்திரம் இரண்டும் ஒன்றுதான்.

"பார்ப்பான், தன்னலத்தையும் ஆதாயத்தையுங் கருதி கோவிலில் வழிபடுகிறவர்களை ஏமாற்றிப்பணம் பறிக்க எவ்வித தந்திரத்தையும் உபயோகிப்பான்" என்று பிரஞ்சுப் பாதிரியாரான கற்றறிந்த ஆபி டுபோய் ஒரு நூற்றாண்டுக்கு முன் எழுதியிருக்கிறார். மேலும் சாணக்கியர் கூறுவதாவது:—

"அரசனது தோட்டத்தில் ஏதாவது ஒரு மரம் அகாலமாகப் பூக்கவோ, காய்க்கவோ செய்திருந்தால் அதில் கடவுள் தோன்றியிருக்கிறார் என்று பொதுஜனங்களிடம் காட்டிப் பிரசித்திப்படுத்தவேண்டும்"

"அல்லது ஒரு கிணற்றில் அனேக தலைகளையுடைய பாம்பு ஒன்றிருப்பதாகச் சொல்லி அதைப் பார்க்க வருபவர்களிடமிருந்து ஒற்றர்கள் பணம் வசூலிக்கலாம்."

"ஒரு பாம்பு விக்கிரகத்தில் துவாரமிட்டோ, அல்லது கோவிலின் இருட்டு மூலையிலோ, அல்லது ஏதாவது பொந்திலோ பசியால் வாடிக்கிடக்கும் பாம்பொன்றை வைத்து, ஜனங்களைப் பார்க்கச் சொல்லிப் பணம் வசூலிக்கலாம். இம்மாதிரித் தந்திரங்களை எளிதில் நம்பாத ஜனங்களுக்கு மயக்க மருந்து கலந்த நீரைத் தீர்த்தமென்றும் பிரசாதமென்றுஞ் சொல்லிக் குடிக்கும்படி செய்து, அவர்கள் குடித்து மயங்கியவுடன், அதற்குக் காரணம் கடவுள் கோபமென்றும் சொல்லவேண்டியது. அல்லது தாழ்ந்த சாதியானொருவனைப் பாம்பு கடிக்கும்படி செய்து, இம்மாதிரி துர்ச்சகுனம் நேரிடாது தடுக்கப்போவதாகப் பாசாங்கு செய்து ஒற்றர்கள் பணம் வசூலிக்கலாம்."

தெய்வங்களுக்குச் சமர்ப்பிக்கப்படும் காணிக்கைகள் அரசனது பொக்கிஷத்தைச் சேரவேண்டும்! அரசனது செலவுக்காக, அரசன் வாழும்பொருட்டுப் பணம் வசூலிக்க ஒரே

இரவில் தேவதைகளையும் பீடங்களையும் ஸ்தாபித்துத் திரு விழாக்கள் நடத்தவேண்டும்! காணிக்கைகளைப் பெறுவதற் காகக் கடவுள்கள் தோன்றும்படி செய்யவேண்டும்! "சாதா ரணமாக மிக வெளிப்படையான தந்திரங்கள்தான் அதிக மான பலனை அளிக்கின்றன. கடவுள் தம் மூலம் பேசுவ தாகப் பாசாங்கு செய்து பணம் திரட்டும் வழி முன்காலத்தில் மற்றநாட்டுப் புரோகிதர்களால் கையாளப்பட்டு வந்தது. ஆனால் இந்தியாவில் இன்றும் இவ்வழக்கம் ஓயவில்லை. இங்கு விக்கிரகங்களே பேசுகின்றன. இவற்றை வழிபடுகிற வர்கள் மிகக் கவனமாகக் கேட்டுப் பரவசமடைகிறார்கள்; ஆனால், கல் விக்கிரகத்தின் உள்ளோ, பக்கத்திலோ வஞ்சக னொருவன் மறைந்திருந்து விக்ரகத்தின் வாய் வழியாகப் பேசு கின்றான் என்பதை இவர்கள் அறிவதில்லை" யென்று ஆபி டுபாய் கூறுகின்றார். இவைபோன்ற இன்றளவும் கையாளப் பட்டு வருகிற பலவித தந்திரங்களையும் அவர் விரிவாக விளக்குகிறார்.

இனி, நமது சாணக்கியரைக் கவனிப்போம். சாணக் கியர் காலத்தில் கோவில் வருவாயிலிருந்து ஒரு பைசாவா வது அரசனது பொக்கிஷத்தைச் சேரத்தவறிவிட்டால், அந்த இடத்திலேயே கோவில் அதிகாரி ஏன் தூக்கிலிடப்பட்டிருப் பார் என்பதை நாம் மேற்சொன்னவற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அது மிகவும் நியாயமே. ஏனெனில் அக்காலத்தில் 'விக் கிரகங்களும், பீடங்களும்' அரசனது வியாபாரத்திற்காக ஏற் பட்டவைகளாகும். பொதுஜனங்களின் பணத்தை, அதா வது அரசனது பணத்தைச் செலவிட்டே விக்கிரகங்களையும் பீடங்களையும் மடங்களையும் கோவில்களையும் உண்டு பண்ணி, பரிபாலித்து அவற்றைப்பற்றிப்பெரிதாக விளம்பரப் படுத்தியும் வந்தார்கள். இக்காலத்தில் அரசாங்கத்தார் எவ் வாறு பெரும் பொருள் செலவிட்டு மேட்டூர் தேக்கத்தையும் சுக்கூர் அணைக்கட்டையும் கட்டி, அவற்றினின்றும்லாபத்தை எதிர்பார்க்கின்றார்களோ, அதே போல முன்காலத்து அர சர்கள் கோவில்களை உற்பத்தி செய்ததும் லாபத்தைக் கரு தியேயாகும்.

இம்மாதிரி 'மதஸ்தாபனங்'களை ஏற்படுத்திய முற்கால மன்னர்களைச் சுற்றி விரோதிகள் எப்பொழுதும் இருந்து

வந்ததால் இடைவிடாது யுத்தங்கள் நேரிட்டுக்கொண்டே யிருந்தன. இதற்காக அவர்கள் பெருஞ்சேனைகளை வைத்திருந்தனர். யுத்தங்களுக்கும், சேனைகளுக்கும் வேண்டிய பணத்திற்காக ஏராளமான வருவாய் தேவைப்பட்டது. கோவில் வருவாயைக்கொண்டு பார்ப்பனருக்கு மட்டும் சோறு போடுவது என்றிருந்தால், அரசும் கோவிலும் அன்றே மறைந்திருக்கும். இக்கோவில்களையும் பீடங்களையும் கடவுள்களையும் படைத்த அக்காலத்து அரசர்களுக்கு அரசாங்கத்தை நடத்தும் கஷ்டம் எவ்வளவு என்று தெரியும். உதாரணமாக, பூரண மதுவிலக்கு ஏற்பட்டால், நாட்டில் உயர்தரக் கல்வியை நிறுத்த நேரிடுமென்று இன்று நமது மந்திரிகள் சொல்வது போல, தங்களது க்ஷேமமும், ராஜாங்கத்தின் க்ஷேமமும் கோவில் வருமானத்தில் தொங்கிக்கிடந்தனவென்பதை அக்காலத்து அரசர்கள் அறிந்திருந்தார்கள். ஆதலால் அவர்கள் அதன்மீது மிகுந்த கவனஞ் செலுத்தி வந்தார்கள். இவ்வுலக சுகதுக்கங்களைக் குறித்து அவர்கள் நினைத்தார்களே யன்றி மோக்ஷலோகத்தைப் பற்றி நினைக்கவில்லை. இக்காலத்து சுதேச மன்னர்களில் பெரும் பாலோர் யாதொரு பொறுப்பும் கவலையுமெடுக்காது மோக்ஷலோகத்தைப்பற்றி நினைக்கின்றார்கள். பார்ப்பானைத் திருப்தி செய்தால் மோட்சத்துக்குச் சீட்டுக் கிடைத்துவிடுமென நம்புகிறார்கள். அங்ஙனம் செய்துவிட்டு, தங்கள் ராஜ்யங்களை விட்டு, தற்கால மோட்ச பூமியான பாரிஸ் முதலிய மேனாடுகளுக்குச் சென்று விடுவதுமுண்டு.

தோழர் கே. எம். பணிக்கர் அவர்கள் "இந்திய சமஸ்தானங்களும், இந்திய அரசாங்கமும்" என்ற தமது புத்தகத்தில் அடியில் வருமாறு எழுதுகிறார்:—

"பல சிற்றரசர்கள் மிதமிஞ்சிய சுகபோகங்களுடன் இழிவான வாழ்க்கை வாழ்வதற்குக் காரணம் அவர்கள் ராஜ்ய பாரத்தில் நேராகப் பொறுப்பெற்று நடத்தாததே யாகும். முன்காலங்களில், குடிகளைத் துன்புறுத்தும் கொடுங்கோல் மன்னனையும், தனது சுகமொன்றையே கருதும் துர்நடத்தைக்காரரையும் சும்மாவிட்டு வைத்திருக்க மாட்டார்கள். வெளியிலிருந்தேற்படும் படையெடுப்போ, அன்றி உள்நாட்டுக் கலகமோ அவனது வாழ்க்கையை முடித்துவிடும். ஆனால் இக்காலத்தில் அப்படியல்ல. ஒரு அரசன் தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மீற

திருப்பதுவரையும், நாகரிக ஆசாரங்களை வெளிப்படையாகப் புறக்கணியாதிருப்பது வரையும் அவனுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஆதரவிருக்கின்றது. அவன் தனது சுகபோகங்களுக்காகத் தன் இஷ்டம்போல் பொக்கிஷத்தை உபயோகிக்கவும், குடிகளைக் கொள்ளையடிக்கவும் விட்டுவிடுகிறார்கள்''

ஸர் தாமஸ் மன்ரோவின் அடியிற்கண்ட குறிப்புகளையும், தோழர் பணிக்கர் அவர்கள் எடுத்துக்கூறுகிறார்:—

''இந்தியாவில் மோசமான ராஜ்யபாரம் ஏற்படுமாயின், அரண்மனையில் புரட்சி உண்டுபண்ணியோ அல்லது உள்நாட்டுக் கலகத்தாலோ அதைச் சரிப்படுத்துவதுதான் வழக்கம். ஆனால் உள்நாட்டு வெளிநாட்டு விரோதிகளின்றும் மன்னனைக் காப்பாற்ற பிரிட்டிஷ் படைகளிருப்பதால், அவ்விதம் கொடுங்கோன்மையைப் பரிகரிக்கும் வழி யெதுவுமில்லாமற் போய்விடுகின்றது. தனது பாதுகாப்புக்கு அன்னியர் உதவியிருக்கின்றதென்ற நம்பிக்கையால் அவன் சோம்பேறியாய் விடுகின்றான்; தனது குடி மக்களுடைய வெறுப்பு தன்னையொன்றுஞ் செய்யமுடியாதென்ற எண்ணத்தால் அவன் கொடியவனாகவும், பேராசை பிடித்தவனாகவும் ஆய் விடுகின்றான்.''

கோவில்களிலிருந்து தனக்குப் பணம் வந்துகொண்டேயிருக்க வேண்டும் என்பதொன்றையே அரசன் கவனித்தான் என்பது இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றிலிருந்து விளங்கும். யார் பணம் கொடுத்தார்கள்; யார் கோவில்களுக்குப் போய் வணங்கினார்கள்; யார் மனவருந்தினார்கள் என்பதைபற்றியெல்லாம் அவன் கவனித்ததில்லை. இவர்கள் சண்டாளராகவும், சூத்திரராகவும், வைசியராகவும், க்ஷத்திரியராகவும், பிராமணராகவு மிருக்கலாம். சண்டாளனாக விருந்தாலும், அவன் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக பணம் கொடுக்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அரசனுந் திருப்தியடைந்திருப்பான். பணம் வருமென்று தெரிந்தால், அரசன் தனது விக்கிரகங்களையும், பீடங்களையும், ஸர்ப்பங்களையுங் கொண்டு சண்டாளருக்கு விசேஷ வேடிக்கைகளையுங் காட்டியிருப்பான். ஒரு சண்டாளன் தனது கோவிலுக்குள் நுழையவோ, விக்கிரகத்தையோ, பாம்பையோ, மரத்தையோ வணங்கவோ செய்யவொட்டாமல் ஒரு வர்ணாச்கிரமதர்மி தடுப்பதினிமித்தம் தனக்கு நியாயமாக வரவேண்டிய வரு

வாய் தடைப்படுத்துவதாகத் தனது காதுக்கு எட்டினால், இம்மாதிரித் தடை செய்பர்கள் பார்ப்பனராக இருந்த போதிலும், இவர்களைச் சமீபத்திலிருக்கும் மரத்தில் கட்டித் தூக்கி யிருப்பான்.

அக்காலத்தில் இந்துக் கோவில்கள் அரசனுடைய வருவாய்க்கு அவ்வளவு தூரம் மூலகாரணமாயிருந்தன. ஆகவே எக்காரணத்தைக் காட்டியேனும், இவன் சண்டாளன் இவன் தாழ்ந்த சாதி ஆகையால் கோவிலுக்குள் போகவோ, வணங்கவோ கூடாதென்று யாரேனும் சொன்னால், அவன் அந்த இடத்திலேயே கொடிய ராஜத்துரோகக் குற்றஞ் செய்தவனாகக் கருதப்பட்டிருப்பான்.

சண்டாளர்முதல் பிராமணராகவுள்ள அனைவரும் கோவிலுக்குள் போய் வணங்கி, தம்மாலியன்ற பொருளை அரசனுக்குக் கொடுக்கும்படி செய்வதே அரசர்களின் கொள்கையாக இருந்தது அல்லது இருக்கிருக்கவேண்டும் என்பது இந்தக் கோவில்களின் உற்பத்தியினின்றும் மிகத் தெளிவாகத் தெரிகின்றது. பார்ப்பான் விஷயத்தில்கூட யாதொரு வித்தியாசமும் பாராட்டவில்லை. அதாவது, ஒவ்வொருவரும் கோவிலுக்குள் போய் வணங்கி அதற்காகப் பொருளும் கொடுக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டிருப்பார் என்பதாகும்.

---

பர்மாவில் ஓர் மாது 6–குழந்தைகளை ஒரேகாலத்தில் பிரசவித்தனவாம். அதில் 3-பெண் 3-ஆண். ஒரு பெண் குழந்தை இறந்துவிட்டதாம். மற்றும் 5-சிசுக்கள் தாயுடன் சுகம். இதைப்போன்று ஜெர்மனியில் ஒரு மாது 7-குழந்தைகளை ஒரேகாலத்தில் யீன்றனளாம். அவ்வேழு குழந்தைகளையும் அரச குடும்பத்தினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறதாம்.

* * *

உலகத்தில் சராசரி ஜனத்தொகை [2,100,000 000] இருநூற்று பத்து கோடியாம். அதில் முக்கால் பாகம் நான்கு திசைகளில் வசிக்கின்றார்களாம். உலக பூமி 8-ல் 1-பாகத்தில் தான் இச்சனத்தொகை அடங்கியிருக்கிறது.

# தமிழ்நாடு தமிழருக்கே.

காங்கரஸ் லக்ஷ்யம் "சுயராஜ்யம்" என முதன் முதல் கூறியது காலஞ்சென்ற தாதாபாய் நவரோஜி. அதுபோல "தமிழ் நாடு தமிழருக்கே" என தமிழர்களின் பிரதிநிதிகளான மூன்று பெரியார்கள் சென்ற 11-ந்தேதி சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒன்றரை லக்ஷம் தமிழர்கள் முன்னிலையில் கூறிவிட்டார்கள். அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த மறைமலை அடிகள் மதவாதிகள் பிரதிநிதி, அக்கூட்டத்தில் பேசிய தோழர் பாரதியார் காங்கரஸ்காரர் பிரதிநிதி, அன்று பேசிய ஈ. வெ. ராமசாமிப் பெரியார் பகுத்தறிவு வாதிகள் பிரதிநிதி. ஆகவே தமிழ் நாட்டின் அபிப்பிராயம் அக்கூட்டத்திலே பூரணமாகப் பிரதிபலித்தது என தைரியமாகக் கூறிவிடலாம். தமிழ் நாட்டார் மதவாதிகள், பகுத்தறிவு வாதிகள், காங்கரஸ் வாதிகள் என்ற மூன்று பெரும் பிரிவில் அடங்கி விடுவர். அந்த மூன்று பிரிவார் அபிப்பிராயத்தையே அந்த மூன்று பெரியார்களும் தமிழர்களுக்கு அன்று பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதனால் இப்பொழுது தோன்றியிருக்கும் தமிழர் இயக்கம் எந்தக் கட்சிக்கும் உரியதல்லவென்பதும் ஜாதி மத நிற கட்சி வித்தியாசமின்றி தமிழர்கள் அனைவருக்கும் சொந்தமானது என்பதும் விளங்கி விட்டது. இனி "தமிழ் நாடு தமிழருக்கு" என்பதே தமிழர்களின் மூல மந்திரமாக இருக்க வேண்டும். "தமிழ்நாடு தமிழருக்கே" என்னும் பொன்மொழியைத் தமிழர்கள் சதா ஞாபகத்தில் வைத்துத் தமிழர்

இயக்கத்தை வலுப்படுத்த முயல வேண்டும். "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற பொன்மொழியே பெரிய எழுத்தில் அச்சிட்டு ஒவ்வொரு தமிழனும் தன் வீட்டுச் சுவரில் ஒட்டி வைக்க வேண்டும். அச்சுக்கூடச் சொந்தக்காரரான தமிழர்கள் எல்லாம் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற பொன்மொழியை அழகிய எழுத்தில் அச்சிட்டு தமிழ் மக்களுக்கெல்லாம் இலவசமாக வழங்க வேண்டும். "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற பொன்மொழியை தமிழ் நாடு முழுதும் ஒலிக்க வேண்டும். உண்ணும் போதும், உறங்கும்போதும், நடக்கும் போதும், வேலை செய்யும்போதும், ஓய்வெடுத்துக் கொள்ளும் போதும் "தமிழ் நாடு தமிழருக்கே" என்ற ஞாபகமே தமிழருக்கு இருக்க வேண்டும். தமது மரபுக்கு ஆபத்துண்டாகும் காலத்துத் தமிழர்கள் கட்சி பேதங்களையும், அபிப்பிராய பேதங்களையும் மறந்து ஒன்று படத் தவற மாட்டார்கள் என்பது சந்தேகமற விளங்கி விட்டது. பல பிரிவினராய்ப் பிரிந்து நின்ற தமிழர்கள் ஒன்றுபட ஒரு தருணமளித்த கனம் ராஜகோபாலாச்சாரியாருக்கு தமிழர்கள் எல்லாம் நன்றி செலுத்த வேண்டியது தான். பன்னூற்றாண்டு காலம் ஆரியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த தமிழர்கள் ஆங்கிலக் கல்வியால அறிவு விளக்கம் பெற்று ஆரியப்பிடியிலிருந்து ஒருவாறு விடுபட்டு வருகையில் தேசியத்தின் பெயரால் மீண்டும் தமிழர்களை ஆரியர்களுக்கு அடிமைப்படுத்தச் சூழ்ச்சி வேலைகள் நடைபெறுகின்றன. அச்சூழ்ச்சி வெற்றி பெறத்தமிழர்கள் சம்மதிக்கவே கூடாது. ஆரிய நாகரிகத்தை எதிர்த்துப் போராடிய புத்தர் இயக்கத்தை சூழ்ச்சிக்காரப் பார்ப்பனர்கள் தமது பார்ப்பன மதம் மூலம் அடக்கி விட்டனர். அப்பால் ஆரிய நாகரிகத்தை ஒழிக்கப் போராடி வெற்றி பெற்றுவரும் சுயமரியாதை இயக்கத்தை தேசியத்தின் பேரால் ஒழிக்க காங்கிரஸ் பார்ப்பனர் முயல்கின்றனர். இச்சூழ்ச்சியை உணராது காங்கிரஸ் தமிழர்களும் பார்ப்பனர்களுக்கு உடந்தையாக இருந்துகொண்டு உதவிபுரிந்து வருகிறார்கள். காங்கிரஸ் வாதியான பாரதியாரைப் பார்த்தாவது அவர்கள் நல்லறிவு பெறுவார்களாக.

தோழர் ஈ.வெ.ரா. 11ந்தேதி சென்னைக் கூட்டத்தில் கூறியது போல் தமிழ நாட்டைத் தனியாகப் பிரிக்கத் தமிழர்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும். இந்தி எதிர்ப்பு இயக்கம் தமிழ் மாகாணப் பிரிவினை இயக்கத்துக்கு முதல்படியே. தமிழ்நாடு தனியாகப் பிரிக்கப்பட்டால் தமிழர் மொழியும் இலக்கண இலக்கியங்களும் கலைகளும் நாகரிகமும் விருத்தியடையும். தமிழ் மொழி வளரும் தன்மையுடைய சீரியமொழி—ஜீவ மொழி. எல்லாக் கலைகளையும் எல்லா அறிவுகளையும் தன்னுள் அடக்கிக்கொள்ள தமிழுக்கு சக்தியுண்டு. தமிழர் கலைகளையும் மத அறிவையும் வடமொழியில் சேர்த்தே ஆரியப் பார்ப்பனர் வடமொழியை வளப்படுத்திக்கொண்டனர். இதனை ஒரு பார்ப்பனரான காலஞ்சென்ற பண்டித வி. கெ. சூரிய நாராயண சாஸ்திரியாரே ஒப்புக்கொண்டிருக்கிறார். தமிழர்களுக்கு இப்பொழுது முக்கியமாகவேண்டப்படுவது மேனாட்டு விஞ்ஞான அறிவு. மேனாட்டு விஞ்ஞான நூல்களை—தமிழில்—நல்ல சுத்தத் தமிழில் மொழிபெயர்த்தாக வேண்டும். மொழிபெயர்க்குங்கால் சொற் பஞ்சம் ஏற்படுமோ என அஞ்சத் தேவையில்லை. இன்றியமையாத இடங்களில் ஆங்கிலப் பதங்களையும் தாராளமாக வழங்கலாம். 'பிலாஸபி, லாஜிக, பிசிக்ஸ், கெமிஸ்டிரி, முதலிய ஆங்கில அறிவு நூல்களில் வழங்கப்படும் சொற்கள் எல்லாம் ஆங்கில பதங்கள் அல்ல. கிரீக், லத்தீன், பிரஞ்சு, ஜெர்மன், ஸம்ஸ்கிருதம் முதலிய பதங்களை ஆங்கிலப் பேராசிரியர்கள் தாராளமாகக் கையாண்டிருக்கின்றனர். அம்முறை எம்மொழிக்கும் இழுக்காகாது. தமிழ் மொழியைப் பல வழிகளிலும் வளப்படுத்துவதே நமது முழு நோக்கமாக இருக்க வேண்டும். தமிழ்மொழி அவ்வுயரிய நிலையை அடைய வேண்டுமானால் அது ராஜாங்க பாஷையாகித் தீரவேண்டும். தமிழ் மாகாணம் தனியாகப் பிரிக்கப்பட்டால்தான் தமிழ் ராஜாங்க பாஷையாக முடியும். ஆகவே தமிழ்மாகாணப் பிரிவினை விஷயத்தில் தமிழர்கள் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

காங்கரஸ் கொள்கைப்படி பாஷாவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டால் எல்லா மாகாணங்களுக்கும் பொதுவான ஒரு பொது மொழி வேண்டியது அவசியமே. அதற்கு ஏற்றமொழி இப்பொழுது இந்தியப் பொதுமொழியாக இருக்கும் ஆங்கிலமே. ஆங்கிலம் இந்தியப் பொதுமொழியாக மட்டுமன்றி உலகப் பொதுமொழியாகவும் இருக்கிறது. மக்களுக்கு சுதந்தர உணர்ச்சியையும் நல்லறிவையும் புகட்டக் கூடியது ஆங்கிலமே. மறைமலையடிகள் 11-ந்தேதிக் கூட்டத்தில் கூறியதுபோல இந்தியர்களை மனிதராக்கியது ஆங்கிலமே. இந்தியர்களுக்கு சுதந்தர உணர்ச்சியைக் கொடுத்ததும் ஆங்கிலமே. இந்தியர்களைப் பகுத்தறிவாளராக்கியதும் ஆங்கிலமே. இந்தியமொழிகளுக்குப் புத்துயிரளித்ததும் ஆங்கிலமே. இந்தியமொழிகள் புதுமுறையில உருப்பெற்று வருவதற்குப் பெரிதும் உதவி புரிந்தது ஆங்கிலமே. நேருணர்ச்சியுடைய மொழிவல்லாரெல்லாம் இதனை ஒப்புக்கொள்வர். ஆங்கிலம் இந்தியர்களுக்கு அடிமை மனப்பான்மையை உண்டுபண்ணி விட்டதென காங்கரஸ்காரர் கூறுவது மிகவும் நன்றிகெட்ட பேச்சாகும். இந்தியால் இந்தியாவில் ஒற்மை ஏற்படுமெனக்கூறுவது குறும்புத்தனம்—போக்கிரித்தனமானதாகும். இந்தியின் யோக்கியதைகளை விளக்கிப் பலர் "விடுதலை"யில் எழுதியிருப்பதினால் நாமும் மீண்டும் எழுத விரும்பவில்லை. ஆங்கிலத்தினால் நாம் பெற்ற நலங்களையெல்லாம் ஒழித்து தமிழரை வட நாட்டாருக்கும் ஆரிய நாகரிகத்துக்கும் அடிமைப் படுத்தவே காங்கரஸ் பார்ப்பனர்கள் முயல்கின்றார்கள். ஆகவே தமிழ்மாகாணத்தை தனியாகப் பிரித்து தமிழை ராஜாங்க பாஷையாக்குவதையும் ஆங்கிலத்தை இந்தியப் பொதுமொழியாக்குவதையும் லக்ஷ்யமாகக்கொண்டு தமிழர் இயக்கம் உழைக்கவேண்டுமென்பது நமது பேரவா.

# பூ தோற்றம்.

## ஆர். மெக்மிலன்

### பூமியின் சலனம்.

IV

இப்பூமியின் உற்பத்தியைக் குறித்து ஆராய்வதற்கு அறிவதற்கு முன்—பூமி என்றால் என்ன, அது எங்கிருக்கிறது, அது என்ன செய்துகொண்டிருக்கிறது? என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

சென்ற அத்தியாயத்தில் இரவும் பகலும் உண்டாவதற்கு பூமி எப்படித் தன்னைத்தானே சுற்றிக்கொள்கிறதென்பதை விளக்கினேன். இரண்டாவது கிறிஸ்துமஸ், புதிய வருஷம் முதலிய நாட்கள் தோன்றும் பொருட்டு சூரியனை பூமி நிமிஷத்துக்கு ஆயிர மைல் வேகத்தில் சுற்றி வருகிறது என்பதையும் விளக்கினேன்.

ஆக, பூமிக்கு இரண்டு வித சலனங்களிருக்கிறதென்பதையும் விளக்கினேன்.

இந்த அத்தியாயத்தில் அதற்கு மூன்றாவது சலனம் ஒன்றிருக்கிறது என்பதை விளக்கப்போகிறேன். அதை அறிய நீ மிக ஆச்சரியப்படுவாய். இந்த மூன்றாவது சலனத்திலிருந்து பூமியின் உற்பத்தி என்பது ஒரு சாதாரண விஷயமல்ல என்பதையறிந்து கொள்வாய்.

பூமி எத்தன்மையுடையது, அதற்கும் நமக்குமுள்ள சம்பந்தம், நமது நிலைமை முதலியவைகளை அறிந்தால் நாம் அறிவாளிகளாகவும், பொறுமைசாலிகளாகவும், அன்புநிறைந்தவர்களாகவும் விளங்குவோம் என்பதில் சந்தேகமில்லை.

நமது பூமி சூரியனை 930 லட்ச மைல் தூரத்திலிருந்து கொண்டு சுற்றி வருகிறது. நமது பூமி மட்டும் சூரியனை சுற்றி வருகிறதில்லை. பல் வேறு உலகங்களும் சுற்றிவருகின்றன. சில நமது பூமியைவிட பெரியவைகளாயும் சில சிறியவைகளாயுமுள்ளன. சில நமது பூமியை விட வேகமாகவும் சில மெதுவாகவும் சுற்றி வருகின்றன. அவைகள் வானத்திலே நக்ஷத்திரங்களைப்போலவே மின்னுவதைக் காணலாம்.

நமது பூமியைப்போலவே நான்கு பூமிகள் இருந்து வருவது நமது சாதாரண கண்களுக்குத் தெரியும்.

ஒன்று சுக்கிரன். இது சூரியனுக்கு சமீபத்திலிருக்கிறது. சிலவேளைகளில் மாலை நட்சத்திரமாகவும் சில வேளைகளில் காலை நட்சத்திரமாகவும் காணப்படுவதை நீங்கள் கண்டிருப்பீர்கள். சில வேளைகளில் நமது கண்களுக்குத் தெரியாமல் மறைந்திருப்பதுமுண்டு.

உண்மையில் அது நட்சத்திரமல்ல. ஏனெனில் நட்சத்திரங்கள் என்பவைகள் சூரியன்கள் என்பதை விளக்கியிருக்கிறேன்.

கிரகங்கள் திடபதார்த்தங்களால் ஆனவை. அவைகள் கறுப்பு நிறமுடையவைகள். அவைகளின் மேல் சூரியனுடைய ஒளி வீசினால் அல்லாது அவைகள் நமக்கு காணப்படமாட்டா. இந்த 4 கிரகங்களின் மீது சூரிய ஒளி படுவதாலே நமக்குத் தெரிகின்றன.

இராக்காலங்களில் அவைகள் நமக்குத் தெரிவதில்லை. அவைகள் சூரியனுடைய குழந்தைகள். சந்திரனோ நமது பூமியின் குழந்தை.

சந்திர மண்டலத்துக்கும் நமது பூமிக்கும் 2,40,000 மைல் தூரம். உயிர் வர்க்கங்கள் தங்க முடியாத தணல் மயமான ஒரு கோளம். அது நமது பூமியைச் சுற்றி வருகிறது.

அதில் மனிதன் வசிக்க முடியாது. சூரியனது ஒளி அதன் மீது விழவில்லையானால் நம்மால் அதைப்பார்க்க முடியாது.

பூரணச் சந்திரன் என்றும் அமாவாசை என்றும் கூறு கிறோமல்லவா. பூரணச் சந்திரன் என்பது அன்றைய தினம் சூரியனது ஒளி அதன் மீது பூராவும் விழுகிறதென்பதாகும். அமாவாசையன்று சூரியனது ஒளி விழுவதேயில்லை என்ப தாகும்.

கால்சந்திரன் அரைச்சந்திரன் போன்ற சந்திரன்கள் கிடையாது.

சந்திரன் பூமியைச் சுற்றிக்கொண்டே வருகிறது ஆனால் மூன்னோர்கள் சந்திரன் தோன்றுவதும் மறைவது மாயிருந்ததாக நினைத்துவந்தார்கள். அதேமாதிரி இன்றும் நம்மவர்கள் பல விஷயங்களைக் குறித்து தப்பான எண்ணங் கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாகத்தான் உலகிலே பஞ்சமும், தரித்திரமும், துன்பமும், குற்றமும், யுத்தமும் இருந்து வருகிறது.

சூரியனை 8கிரகங்கள் சுற்றிவருகின்றன. மிகசமீபத்திலி ருக்கும கிரகத்தின் தூரம் 870 லட்சம் மைல். மிக தூரத்தி லிருக்கும் கிரகத்தின் தூரம் 300 கோடி மைல்.

ஒவ்வொரு கிரகத்தின் வரலாறு மிக விநோதமாயிருக் கும். அவைகளைக் குறித்து இப்பொழுது குறிப்பிடப் பிரியப்படவில்லை.

நீ ஆகாயத்தில் பார்க்கிற கிரகம் 1300 மடங்கு நமது பூமியைவிடப் பெரியது.

அங்காரகனுக்கும் குருவுக்குமிடையே ஆயிரக்கணக் கான சிறு கிரகங்கள் மிளிர்கின்றன. நமது பூமி எந்த ஆக் ரண சக்தியால் இயங்கிக்கொண்டிருக்கிறதோ அதே சக்தி யால்தான் எண்ணற்ற அந்த கோளங்களும் இயங்கிக்கொண் டிருக்கின்றன.

இந்த பூமி எப்படி ஆரம்பித்தது என்று சொல்லுவதற்கு முன் அதைக் குறித்துச் சொல்லவேண்டுமென்று நினைக் கிறேன்.

சுற்றமாகிய பூமிகளுக்கு மத்தியில் சூரியனிருக்கிறது. குழந்தைகளாகிய பூமிகள் அதை இடைவிடாது சுற்றிக் கொண்டிருக்கின்றன.

# அறிவுத் துணுக்கு

(எஸ். கே. பி. முத்துராஜா)

கூடாக்காரியம்

குழந்தையின் தலையில் அடிப்பதும், காதைப்பிடித்து திருகுவதும், இழுப்பதும் கூடாது. ஏனெனில் குழந்தையின் காதிற்குள்ளும் தலையினுள்ளுமிருக்கும் கருவிகளும் செல்களும் (Cells) நுட்பமாகவிருப்பதால் அவைபாதகமடையும்.

---

நமது பூமி சூரியனை மணிக்கு 68,000 மைல் வேகத்தில் சுற்றிவருகிறது. நமது கண்ணுக்குத் தெரியக்கூடிய கடைசியாக இருக்கிற கிரகம் பிரமக்தன் என்னும் கிரகம். இது மணிக்கு 3000 மைல் வேகத்தில் சுற்றி வருகிறது. எண்ணற்ற கிரகங்களோடு நமது பூமியை ஒப்பிடும் போது இது மிக அற்பமாகவே காணப்படும்.

நமது பூமிக்கு மூன்றாவது சலனமிருக்கிறதாகச் சொன்னேன் அல்லவா! அது என்னவென்றால் ஒரு செக்கண்டுக்கு 12 மைல் வீதம் இடத்தை நெருங்கிக் கொண்டே செல்லுகிறது என்பதாகும். தெளிவாக செல்ல வேண்டுமானால் இருந்த இடத்தைவிட்டு நகர்ந்து கொண்டே செல்லுகிறது என்பதாகும்.

பூமிக்கு இந்த மூன்று அசைவுகள்-சலனங்கள் மட்டுமிருக்கின்றதாக நினைக்கவேண்டாம். மொத்தம் 7 சலனங்கள் இருக்கின்றன. பாக்கி நான்கைக் குறித்து பின்னால் கவனிக்கலாம்.

எல்லாவற்றைக் குறித்தும் முழுவதும் நம்மால் அறிந்து கொள்ள முடியாது. ஏனெனில் விஞ்ஞானிகள் ஓரளவுதான் ஆராய்ச்சி செய்து நுட்பங்களை விளக்கியிருக்கின்றனர். அந்த அளவுக்குத்தான் வானமண்டல விஷயத்தைக் குறித்து விளக்கமுடியும். எவ்வளவோ இன்னும் அறியாததாகவே நமக்கு தோன்றும்.

பச்சை குத்துவது,

காசைக்கொடுத்து கைக்கு வேதனை தேடிக்கொள்ளும், பச்சை குத்திக்கொள்ளும் வழக்கத்தை முற்றிலும் ஒழிக்க வேண்டும். முன் காலத்தில் குற்றவாளிகளைத் தெரிந்து கொள்ள நெற்றியில் பச்சை குத்துவது வழக்கமாம். காரணம் அறியாமல் இப்பொழுதும் நெற்றியில் பச்சை குத்திக் கொள்கிறார்கள்.

நன்மை கொளல்

சில நூல்களில் உள்ள மூட நம்பிக்கைகள் நிறைந்தசதை களை நம்பிவிடாது, அவைகளிலுள்ள கற்பனை அமைப்பு முதலியவைகளை மட்டுமே மனதில் பதியவைக்க வேண்டும்.

நமக்காக ஏற்பட்டவை

விதிகளும், சம்பிரதாயங்களும், இன்னும் பலவும் நமக் காக ஏற்பட்டவைகள். அவைகளுக்காக நாம் ஏற்படவில்லை. ஆதலால் காலத்திற்கும், சமயத்திற்கும், அவசியத்திற்கும் வேண்டிய விதிகளை ஏற்படுத்திக்கொள்வதே நலம்.

கல்யாணபாஷை

கல்யாணகாலங்களில் சொல்லப்படும் மொழிகள் வட பாஷையில் சொல்லப்படுகிறது. மணமக்கள் அம்மொழியை யும் அச்சொற்களின் பொருளையும் அறியார்கள். ஆதலால் திருமணத்தில் தாய்மொழியில் சொல்லுவதுதான் பயனுடைய தாகும். திருமணப்பந்தலிலே மணமக்களின் வருங்கால வாழ்க்கைக்குப் பயனளிக்கத்தக்க பெருஞ் சொற்பொழிவுகள் அறிஞர்களைக் கொண்டு நிகழ்த்துவிக்க வேண்டும்.

பெயர் இடுதல்

பிராமணனுக்குமங்களத்தையும், க்ஷத்திரியனுக்குப்பலத் தையும், வைசியனுக்குப் பொருளையும், சூத்திரனுக்குத் தாழ் வையும் காட்டுகிறபெயரை இடவேண்டும் என்று மனு (அ) தர்ம சாஸ்திரத்தில் தன்னலங்கருதும் சூழ்ச்சியாளர் கூறி யுள்ளனர். இப்பொழுதும் சிலர் தாத்தா பெயர், பாட்டன் பெயர், பாட்டி பெயர், சாமிபெயர் என்று சொல்லிக்கொண்டு முன் மனு (அ) தர்ம காலத்தில் இட்ட அவலட்சணமான பெயர்களையே இடுகின்றனர். இது ராமராஜ்யமல்ல. நல்ல பெயர்களை இடுங்கள்.

சகுணம் பார்த்தல்

கழுதைகத்தினாலும், பல்லி இச்சிலிட்டாலும், சகுணம் பார்ப்பது அறியாமையையே காட்டுகிறது.

நாளும் நல்லோரும்

"நாள் செய்வது நல்லோர் செய்யார்" என்பது ஓர் பழமொழி. நாளானது தீமையான காரியங்களால் உண்டாகும் கோபம், துக்கம் முதலியவைகளை நாள் செல்லச் செல்ல படிப்படியாகக்குறைத்துசாந்தமுண்டாவதுடன்துக்கத்தைமறக்கும்போகச்செய்யும். இப்பழமொழிக்குச் சிலர்வேறு அர்த்தம் கூறுவர். அதாவது சோதிட நூல் சொல்லுகிறபடி ஒரு நல்ல நாளில் ஒரு காரியத்தை ஆரம்பித்தால் அது சிறிதேனும் இடையூறின்றி நிறைவேறுமென்பது. இது தவறு.

ஓமம், வசம்பு

ஓமம், வசம்பு இவ்விரண்டும் கடைகளில் இரவில் விற்பதில்லையாம். இரவு நேரத்தில் விற்றால் அதன் சத்து குறைந்துவிடுமா? அல்லது வியாபாரம் குறைந்து விடுமா? ஏன் என்று கேட்டால் எல்லா கடைகளிலும் இரவில் விற்பதில்லை. அதனால் நாங்களும் விற்பதில்லை என்கிறார்கள். காரணம் என்னவோ? காரணம் என்ன இருக்கிறது இதில். தெரியாத்தனந்தான்.

கணவன் பெயர்.

ஒரு முக்கிய சமயத்தில் கணவன் பெயரைச் சொல்ல பல ஸ்திரீகள் மறுக்கின்றனர். சொன்னால் ஆயுள் குறைந்து விடுமா? அல்லது பழக்கவழக்கமா? தெரியாத்தனமா? முக்கிய சமயத்தில் கணவன் பெயரைச் சொன்னால் அவமரியாதையாகுமா?

பெண் கல்வி.

பெண்கள் படித்திருந்தால்தான் குழந்தைகளுக்கு, கல்வி, சுகாதாரம், சன்மார்க்கம் முதலியவைகளை நன்கு போதிக்கக் கூடும். குழந்தைகளுக்கு முதலாசிரியர் பெண்களே.

கல்யாணம்.

கல்வி கற்ற பெண்ணை கல்லா ஆணுக்கும், கல்வி கற்காத பெண்ணை கற்ற ஆணுக்கும், மணம் செய்யின் இவர்களின்

வாழ்க்கை மாறுபட்ட கொள்கையால் துக்கத்தையே தரும். இவ்வித மணத்தில் மாறுபடாத கொள்கையுடைய தம்பதிகளும், கல்வி கற்ற தம்பதிகளின் மாறுபட்ட கொள்கைகளும் அபூர்வம்.

சிறுவனின் கர்வம்.

ஐந்து வயது சிறுவன்கூட தான் உயர்ந்த ஜாதி என்னும் கர்வத்தால் பெரியோரையும் 'அடா' வென அழைத்துப் பேசுகிறான். கேட்டால் பழக்கவழக்க மென்று சொல்லுகிறார்கள். திருடனைப் பிடித்து நீ ஏன் திருடினாய் என்றால் அதற்கு அவன் இது என் பழக்கவழக்க மென்றானாம். அது போலவேயாகுமிது.

மனைவியை அழைத்தல்.

தன் மனைவியை பெயர் சொல்லி அழைத்தல் வேண்டுமே ஒழிய ஏழா..........ஊரா..........ஊரா என்று அழைக்காதிருப்பது நன்று.

இடி ஓசை.

இடி இடிக்கும்போது சிலர் அர்ஜுனா அர்ஜுனா என்றும் அர்ஜுனன் பெயர் பத்து என்றும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொன்னால் இடி தன்னருகிலும் நெருங்காதாம். என்னே இவர்களின்கூற்று! அர்ஜுனா என்று சொன்னவுடன் இடி விழுவது நிற்பதென்றால், நூறு தடவை சொல்லி வானத்தில் கேட்கும் இடி ஓசையை நிறுத்தலாமே. ஒருபெயரைச் சொன்னதும் இடிவிழாது, சொல்லாவிட்டால் விழும் என்பது சுத்தப்பைத்தியக்காரத்தனமே.

வீண்வேலை.

சிலர் தங்கள் ஓய்வு நேரங்களில் காகிதத்தில் 'ராமா ராமா' என்று எழுதிக்கொண்டே இருக்கிறார்கள், காகிதம் பூர்த்தியானதும் ஆற்றில் விட்டு விடுகிறார்கள். பிறகும் காகிதத்தில் 'ராமா ராமா' என்று எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். காகிதத்திற்கும், மைக்கும், பேனாவிற்கு நஷ்டமும், கைக்கு வீண் வேலையேயாகுமிது.

விளக்கு வணக்கம்

விளக்கு ஏற்றியவுடன் சிலர் கும்பிடும் வழக்கம் இருக்கிறது. விளக்கை ஏன் கும்பிடுகிறீர்கள் என்று கேட்டால் 'லட்சுமி' இருக்கிறதென்கிறார்கள். விளக்கில் 'லட்சுமி' என்கிறது இருந்து இவர்கள் தினமும் வணங்கி வரும்போது இவர்களுக்கு எதிரிடையான காரியங்கள் நடப்பதேன், இப்படிச் செய்வது வீண் வேலையே ஒழிய வேறல்ல. ஒரு சமயம் கைக்கு தினமும் பயிற்சி கொடுக்கிறார்களோ என்னவோ!

அறியாமை நீக்கல்

சாஸ்திரமென்று சொல்லி அறியாமைக்கும் கடவுள் பெயரைச் சொல்லி வஞ்சிப்பவர்களுக்கும் இடம் கொடாமலும் அநீதியையும் அதர்மத்தையும் அடிப்படையாகக் கொண்ட மூடப்பழக்க வழக்கத்திற்கு அடிமைப்படாமலும் இருத்தல் நலம்.

தடையோ பூர்த்தியோ இல்லை.

ஒருவர் செல்லும்போது எங்கு செல்லுகிறீர்கள் என்று கேட்டால் அவர்கள் கோரிச் செல்லும் காரியம் தடைப் பட்டு விடுமாம். கேட்டதால் காரியம் தடைப்படுவதும் கேட்காதிருந்தால் பூர்த்தியாவதும் இல்லை.

மனப்பிராந்தி

சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது விளக்கு நின்றுவிட்டால் சிலர் விளக்கு ஏற்றியும் சாப்பிடாமல் எழுந்து விடுகிறார்கள். பிறகு சாப்பிட்டால் ஜீர்ணமாகாதா? அல்லது சாப்பிடும் உணவு கெட்டு விடுமா? இது எல்லாம் அல்லவென்றால் காரணம் மனப்பிராந்தியே.

எப்படி கிட்டும்?

சிலர் சாப்பிட உட்கார்ந்ததும் முதல் முதல் எடுக்கும் சாதத்தை நெற்றிவரையில் கொண்டுபோய் பிறகு சாப்பிடுகிறார்கள். காரணம் கேட்டால் தனது இறந்த பெரியோர்களுக்கு கொடுக்கிறோம் என்கிறார்கள். அப்படியானால் அந்த சாதம் இவர்கள் வயிற்றுக்குள் தானே போகிறது. அவர்களுக்கு எப்படிக் கிட்டும்?

**கோடியும், மாலையும்.**

மாலை சுற்றிப்பிறக்கும் குழந்தை தாய்மாமனுக்கு ஆகாது (கஷ்டமுண்டாகும்) என்றும் தாய் மாமன் எண்ணையில் விழித்தால் நலமென்றும் சொல்லுகிறார்கள். எண்ணையில் விழித்தால் ஆவதும், விழிக்காவிட்டால் ஆகாததும் இல்லை. இது தெரியாத்தனமே. "கொடி சுற்றிப்பிறந்தால் கோத்திரத்திற்கு ஆகாது, மாலை சுற்றிப் பிறந்தால் மாமனுக்கு ஆகாது" என்பது குருட்டு பழக்க வழக்கமேயாகும்.

**பேய் ஆட்டம்.**

சில பெண்களுக்கு சில வியாதிகளால் சோம்பலும், மயக்கமும், பிதற்றலும் உண்டாவதுண்டு. இப்படி வந்த பெண்களை சிலர் பேய் பிடித்ததென்று உடுக்கை அடித்து கஷ்டப்படுத்துகிறார்கள். இதற்கு தக்க வைத்தியம் செய்வதே நலம். ஏதாவதொரு காரணத்தால் சில பெண்கள் வேண்டுமென்றே பல்லைக் கடித்துக்கொண்டும், கையை ஊன்றிக்கொண்டும் ஆடுவார்கள். பேய், பிசாசு, பூதம், ஆவி முதலியவைகள் இல்லை என்று தக்க மேற்கோள்களோடு ஆதாரம் காட்டி புத்தி போதிக்கக்கூடிய ஆராய்ச்சியாளர் உள்ள இந்த நூற்றாண்டில் இப்படிச் செய்வது நகைப்பிற்கிடமாகும். வேண்டுமென்று ஆடும் பெண்கள் காலையில் எழுந்தவுடன் சாணியைக் கரைத்து அவர்கள் தலையில் ஊற்றி ஷை சட்டியை அவர்கள் தலையில் வைத்து அதில் செருப்பையும், விளக்குமாற்றையும் போட்டு ஆற்றுக்ோ, வாய்க்காலுக்ோ போய் குளித்துவிட்டு ஷை சட்டியையும், செருப்பையும், விளக்குமாற்றையும் சுத்தம் செய்துகொண்டு வரும்படி பத்து பதினைந்து நாளைக்கு செய்துவந்தால் அவமானத்திற்குப் பயந்து ஷை பேயாட்டம் நிற்கலாம். பிற பெண்கள் குளிக்கும் துறையிலேயே தான் போய் சுத்தி செய்துகொண்டு வரவேண்டும்.

**கெட்டபழக்கம்.**

குழந்தைகளுக்கு பயங்காட்டுவதும் உறவின் முறையார்களையோ நண்பர்களையோ திட்டச் செய்வதும் காலால் உதைக்கச் செய்வதும் அடிக்கச்செய்வதும் ஒருபோதும் கூடாது.

**கிரக தோஷ வைத்தியர்**

குழந்தைகளுக்கு நோய் வந்தவிடத்து சில வைத்தியர்கள் "பாலகிரக தோஷம்" என்று சொல்லி மாவினால் பொம்

மையும், பலவர்ணம் கலந்த சோற்று உருண்டைகளும் செய்து மாமிசம், சாராயம், சுருட்டு முதலியவைகளை வைத்துப் படைத்து தோஷம் நீங்கிற்று என்று சொல்லி பணம் பெற்றுப் போகிறார்கள். இப்படிச் செய்வது வீண் செலவே. குழந்தையின் சீக்கிற்கும் பொம்மைக்கும், வர்ணங்கலந்த சோற்றுக்கும் மதுமாமிசத்திற்கும் என்ன சம்பந்தம்? "ஆடி அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும்" உள்ள சம்பந்தந்தான் இதற்கும் உண்டு என்றால் மிகையாகாது.

## ஏமாற்று வித்தை

மாந்திரீகம், வசியம் முதலியவைகள் தெரியுமென்றும், வரப்பிரசாதங்கள் என்றும், இரகசிய சித்துக்களை கற்பிப்பதாகவும், மாந்திரீகத்தால் வியாதிகளைப் போக்குவதாகவும் பிள்ளைவரம் கொடுப்பதாகவும் சொல்லி ஏமாற்றி மோசம் செய்தும், செய்துகொண்டும் வருகிறவர்களிடம் ஏமாறாமல் எச்சரிக்கையாய் இருப்பது நலம். இது எல்லாம் ஏமாற்று வித்தையே ஒழிய வேறல்ல.

## மூக்கு குத்துவது

சில குடும்பங்களில் இன்னும் ஆண்களுக்கு மூக்கு குத்துவது வழக்கமாய் இருக்கிறது. காரணம் கேட்டால் மூன்றாவதாகப் பிறக்கும் குழந்தைக்கு மூக்கு குத்தினால் தான் சாகாமல் இருக்கும் என்கிறார்கள். பல குடும்பங்களில் மூன்றாவதாகப்பிறக்கும் குழந்தைகளுக்கு மூக்கு குத்தாமல் இருக்கவில்லையா? அவர்கள் சாகாமலும் இருக்கவில்லையா? மூக்கு குத்திய பிள்ளைகள் செத்தும் விடவில்லையா? மூக்கு குத்தினால் சாகாதிருப்பதும் குத்தா விட்டால் சாவதும் இல்லை. ஒருசமயம் மூக்கு குத்திய பிள்ளைகள் பிற்காலத்தில் பெண் வேஷதாரியானால் உண்மையான மூக்குத்தியையே போட்டுக் கொண்டு நடிக்கலாம்.

## படிப்பது

அதிகமாகப் படிக்காமல் கொஞ்சமாகப் படித்தாலும் ஆழ்ந்த கருத்துடன் படிக்கவேண்டுமே ஒழிய நுனிப்புல் மேய்ச்சல் கூடாது. "அகல உழுவதைவிட ஆழ உழுவது மேல்" என்பது ஒரு பழமொழி.

## குரூர விளையாட்டு.

சிலர் அல்லையில் கைவைத்து கூச்சப்படுத்தியும், பயந்தவர்களிடத்தில் தேள், பாம்பு, பூரான் உன் அருகில் இருக்கிறதென்று திடுமெனச் சொல்லி பயங்காட்டுகிறார்கள். இப்படிச் செய்யும்போது சில சமயங்களில் அவர்கள் கூச்சத்தாலோ பயத்தாலோ எகிறி விழலாம். அடிபடலாம். கையிலிருக்கும் பொருள் அருகிலிருக்கும் ஆளின் மீதோ குழந்தைகளின் மீதோ, ஒரு பொருளின்மீதோ விழுந்து சேதமுறலாம். ஆதலால் இவ்வித செய்கையை முற்றிலும் நீக்க வேண்டியதவசியம்

## குழந்தையும், நகையும்.

குழந்தைகளுக்கு நகைகளை அணியாமல் இருப்பது நலம். ஏனெனில் பள்ளிக்குச் செல்லும் போதோ, அல்லது வீட்டுக்கு வெளியில் விளையாடும் போதோ சிலசமயம் நகைகளின் நிமித்தம் கள்நெஞ்சர்களால் அநேக குழந்தைகள் தங்களுடைய நகைகளையும் அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய குழந்தையாய் இருந்தால் தங்களுடையஉயிரையும் விட்டிருக்கின்றன. சமீபத்தில் திருச்சியிலும், ஈரோட்டுக்கருகிலும் நகையின் நிமித்தம் இருகுழந்தைகள் தங்களுடைய உயிரை விட்டதாக பத்திரிகையில் படித்திருப்பீர்கள்.

## பெண்ணும், பொன்னும்

சில பெற்றோர்கள் பணம் ஒன்றைமட்டும் கருதி தனது பெண்ணின் பிரியத்திற்கு மாறாக, கூனனோ, குருடனோ, கிழவனோ, மூடவனோ, மூர்க்கனோ, குட்குடியனோ, பெருவியாதி உள்ளவனோ எவனாய் இருந்தாலும் யோசியாமல் அவனுக்கு தனது பெண்ணை மணம் செய்விக்கின்றனர். இப்படி செய்யாதிருத்தல் நலம்.

## அலட்சியம்

ஆண்குழந்தை பிறந்தால் சந்தோஷமும், பெண்குழந்தை பிறந்தால் அலட்சியமும் பல குடும்பங்களில் காணப்படுகிறது. அலட்சியத்திற்கு காரணம் என்னவோ? எந்தக் காரணமானாலும் நடுநிலைமை வகிப்போர் கொள்ளத்தக்கதேயல்ல.

## உண்மை காணல்

ஒருவர் சொல்வதையோ அல்லது எழுதி இருப்பதையோ பார்த்துமே கோபப்படுவதில் சிறிதும் பயன் இல்லை ஒருவர்

சொல்வதில் உண்மையுண்டா? இல்லையா? என்று விருப்பு, வெறுப்பு இன்றி ஆராய்ச்சி செய்வதே அறிவு வளர்ச்சி உடைமையாகும். அப்படிக்கின்றி விருப்புடன் ஆராய்ச்சி செய்யின் குற்றம் காண முடியாது. வெறுப்புடன் ஆராய்ச்சி செய்யின் நன்மைகாணமுடியாது.

## ஆடம்பரக்கல்யாணம்

கல்யாணச் செலவை கூடியவரை குறைத்துச் செய்வது நலம், மிகுபணம் படைத்தவர்கள் செய்யும் ஆடம்பரக் கல்யாணங்களைப் பார்க்கும் சொற்ப வருவாய் உள்ளவர்களும்கூட கடன்வாங்கி ஆடம்பரமாக கல்யாணம் செய்து தனது வீடு, பூமி முதலியவைகளை பின்னால் விற்று அக்கடனை தீர்க்கும் படியும் நேர்வதுண்டு. முக்கியமாக கடன் வாங்கி ஆடம்பரக் கல்யாணம் செய்யாதிருத்தல் நலம்.

## கற்றபெண்கள் கெடுவரோ?

பெண்களுக்கு கல்வி கற்பிக்கப்பட்டால் தங்கள் சோர நாயகர்களுக்கு கடிதம் எழுதுவார்கள் என்றும் ஆண்களை மதிக்கமாட்டார்கள் என்றும் கூறுகிறார்கள். கல்வி கற்ற சில மூடப்பெண்கள் தங்கள் சோரநாயகர்களுக்கு கடிதம் எழுதுவது உண்மையானாலும் அவர்கள் தங்கள் துர்க்குணத் தால் எழுதுகிறார்களே யன்றி கல்வியினால் எழுதுகிறார் களில்லை. துர்க்குணமுள்ள சிலபெண்கள் கடிதம் எழுதுவதை கொண்டு கல்விகற்ற எல்லாப் பெண்களும் கெடுவார்களென் பது முழங்காலுக்கும் மொட்டைத்தலைக்கும் முடிபோடும் சம் பந்தத்தையே ஒத்திருக்கிறது. படித்த பெண்கள் எல்லாம் கெடுவார்கள் என்று கூறுவோர் படியாத பெண்கள் எல்லாம் நல்லவர் என்று கூற முடியுமா? முடியாது. துர்குணமுள்ள பெண்களும் கல்வியை முறைப்படி கற்றுக்கொள்வார்களேயா னால் அவர்கள் மனம் தப்புவழியில் நாடும்போது அவர்கள் கற்ற கல்வி முட்டுக்கட்டை போட்டு தேக்கி அவர்களை நல் வழிப்படுத்தும், பிறரிடம் மரியாதையாக நடக்கவும் கற் பிக்கும்.

## கல்வி இல்லாப்பெண்

கல்வி அறிவற்ற பெண்மக்கள் வீட்டிலே மிகுந்த நேரத் தை வம்பளப்பதிலும், அடுத்தவீட்டுப்பெண்களுடன் சேர்ந்து வீண் பேச்சு பேசுவதிலும் காலங்கடத்துகிறார்கள். சில

சமயம் சண்டையுண்டு கொள்வதுமுண்டு. பெண்கள் படித்திருந்தால் ஓய்வு நேரத்தில் எவ்வளவோ பிரயோஜனமுள்ள வழிகளில் சன்மார்க்கத்தை பிற பெண்களுக்குப் போதிக்க இடமுண்டு. பிற பெண்கள் பேச்சைக்கேட்டு எதையும் செய்யார்கள். வீண்பேச்சு, வம்பு வார்த்தை, உர்வப்பு, கோள் சொல்லுதல், புறங்கூறுதல், மரியாதை இல்லாதிருத்தல் முதலிய காரியங்களில் ஈடுபடவுமாட்டார்கள்.

### ஓய்வு நேரம்

"ஒருவனை நல்லவனா கெட்டவனா என்று தெரிந்து கொள்ள அவனுடைய நண்பர்கள் யார்என்று முதலில் பார்" என்பது போல் "ஒருவன் தன் ஓய்வு நேரத்தை எவ்விதமாய்ச் செலவழிக்கிறான் என்பதை பார்த்தால் அவன் எப்படிப்பட்டவன் என்று தெரிந்துகொள்ளலாம்" என்றுஒரு ஆங்கில பழமொழி உண்டு. ஆகலால் நமது ஓய்வுநேரத்தை சரியான வழியில் செலவழித்து வரல் வேண்டும்.

### விடுமுறை நாள் ஏன்?

வளைந்த வில் சிலகாலம் நிமிர்ந்திருக்க வேண்டும் எப்போதும் வளைந்திருந்தால் பலவீனம் உண்டாகும். அது போல் மனிதரும் ஓய்ந்திருத்தல் நலம். பலர் ஓய்வு நேரத்தில் ஒரு வேலையும் இன்றி வீண் பேச்சுப்பேசி பொழுது போக்க வேண்டுமென்றும் பேசுவர். ஒரு தொழிலோ எண்ணமோ இல்லாமல் ஒருவர் ஓய்ந்திருப்பது அருமை. தொழில் செய்யாவிட்டாலும் மனம் ஏதோ ஓர் யோசனை செய்து கொண்டுதானிருக்கும். ஓய்ந்திருத்தலென்பது படிக்காமலோ யோசனை செய்யாமலோ தோழர்களிடம் பொழுது போக்காமலோ இருப்பதல்ல, தான் தினமும் செய்து வரும் தொழிலை அன்று செய்யாதிருப்பதே. அறிவுக்கு வேலை கொடுப்பவர்களுக்கு அவசியம் ஓய்வு வேண்டும்.

### மூடச்சடங்கு

ஒருவன் கடன் பட்டாயினும் மூடச்சடங்குகளுக்காகச் செலவிடும் பொருளை கணக்கெடுத்துப் பாருங்கள். ஒருவன் இறந்தவுடனாவது இவை ஒழிகின்றனவா? இல்லை. கருவாய் இருக்கும்போதும், குழந்தை பிறக்கும் போதும், அன்னம் ஊட்டும்போதும், முடி எடுக்கும்போதும், காது குத்தும் போதும், பள்ளிக்கு வைக்கும்போதும், ருது சாந்தியின் போதும், கல்யாணத்தின் போதும், காடாற்று, எட்டு, கரு

# சக்தியின் பெருமை.

(ஜியார்ஜ் ஆர். ஹாரிஸன்.)

நாகரிக உலகம் இயங்குவதற்குத் தேவையான சக்தியெல்லாம் சூரியனிடமிருந்தே நமக்குக் கிடைக்கிறது. ஆவியிலிருந்தாயினும் சரி, "பாட்டரி"யிலிருந்தாலும் சரி, நிலக்கரியிலிருந்தாலும் சரி, வெண்ணெயிலிருந்தாலும் நமக்குக் கிடைக்கும் சக்திகளுக்கு எல்லாம் மூலகாரணமாயிருப்பது சூரியனே.

சூரியன் பிரகாசித்துக்கொண்டிருக்கும் வரை சக்திப்பஞ்சம் ஏற்படுமோ என நாம் கவலைப்படத் தேவையே இல்லை. சூரியன் வான மண்டலத்தில் பல்லாயிரம் கோடி வருஷம் முட்டின்றிப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் என்பதற்கு ஏராளமான ருசுக்களும் இருக்கின்றன.

---

மாதியின் போதும், ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு ஆண்டிலும் இறந்த போதும் இன்னும் பல சடங்குகளை நடத்தி ஏழைக்குடிகளது இரத்தத்தை உறிஞ்சி பாழ்படுத்தும் விதமாய் மூடப்பழக்க வழக்கம் உள்ள வரையில் நாம் முன்னுக்கு வருவதெப்படி முடியும்?

'சாமி' 'சாமி'

காப்பிக்கடை பிராமணர்களை "'சாமி' காப்பி கொடுங்கள், இட்லி கொடுங்கள்" என்றும் ஒவ்வொரு பட்சணம் கேட்கும்போதும் "சாமி" "சாமி" என்று சொல்லி பலர்கேட்கிற வழக்கமாய் இருக்கிறது. பசியைத் தணிக்கும் பேசும் சாமிகள் காப்பிக்கடையில் இருக்கும்போது சாமி (கடவுள்) என்பதை பார்க்க முடியவில்லை என்று சொல்லுகிறார்களே! பிராமணர்களை "சாமி" என்று அழைக்கும் வழக்கத்தை தன் மதிப்புடையோர் முற்றிலும் ஒழித்தல் அவசியம்.

---

நமக்கு மெய்யாகவே தேவையாக இருக்கும் சக்தியை விட 20,000 மடங்கு சக்தியை சூரியன் நமக்கு அளித்துக் கொண்டிருந்தாலும் ஒளியை சரியான முறையில் பிரயோகம் செய்ய நாம் அறியாமலிருப்பதினால் அச்சக்தியின் பெரும் பகுதி பாழாகவே போகிறது.

மழைபெய்த நாட்களிலும் மப்பு மந்தாரமாயிருந்த நாட்களிலும், கோடை நாட்களிலும் 24 மணி நேரத்தில் நமக்கு சூரியனிடமிருந்து கிடைக்கும் சக்தி மனித கோடியின் ஒரு நூற்றாண்டுத் தேவைக்குப் போதுமானதாயிருக்கிறது.

சக்தியை ஆராய்வதிலும் அதைக் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டிருப்பவன் பௌதீக சாஸ்திரி. சக்தியைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் அவன் ரசாயன சாஸ்திரியோடும் அநேகமாக ஒத்துழைக்கவே செய்கிறான். ஜடப்பொருள் ஆராய்ச்சியே ரசாயன சாஸ்திரியின் நோக்கம்.

ஜடப்பொருளும் சக்தியும் ரசாயனத்துக்கும் பௌதீக சாஸ்திரத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுடையவை. ஆதியிலே இவ்விரண்டு சாஸ்திரங்களும் இயற்கைத் தத்துவ சாஸ்திரமென்றே அழைக்கப்பட்டு வந்தது. வாஸ்தவத்தில் அவைகளை இரண்டாகப் பிரிக்கவே முடியாது. இப்பிரபஞ்சத்தின் மூலாதார அமைப்பை ஆராய்வதும் விளக்குவதுமே அவைகளின் லக்ஷியம்.

வெப்பம் ஒலி போன்ற முழுசக்திகளை அடக்கியாள பௌதீக சாஸ்திரி கற்றுக்கொண்ட பிறகு ஒளி, மின்சாரம், காந்த சக்தி போன்ற சக்தி நுட்பங்களை அறியவும் ஆற்றலுடையவனானான். இந்த சக்தியாராய்ச்சியில் அவன் திறம்படைத்து விட்டதினால் வெகு நுட்பமான அணுசக்தியின் அமைப்பையும் அறிந்து கொண்டுவிட்டான்.

இத்தகைய அணுசக்தி ஆராய்ச்சியில் பௌதீக சாஸ்திரிகள் தம் பூராநேரத்தையும் செலவு செய்துவருவதினால் அவர்கள் வீண் ஆராய்ச்சியில் பொழுது போக்குகிறார்கள் என்றும் அதை விட்டு விட்டு பயன் தரத்தக்கவழியில் அவர்கள் நேரத்தைச் செலவு செய்யலாமென்றும் பலர் எண்ணத் தொடங்கி விட்டனர்.

ஆகவே ஒளி அணு வாராய்ச்சிக்காரர் அவர்கள் சாப்பி டும் சாப்பாட்டுக்கு ஈடு செய்யும் அளவு கூட உபயோகமான வேலை செய்யவில்லை என சமூக தத்துவசாஸ்திரி கூறுகிறார்.

எவர் எப்படிச் சொன்னாலும் நமது பண்டைகால ஒளி அணு ஆராய்ச்சிக்காரரே உலக நாகரிகத்துக்கும் உலக இன் பங்களுக்கும் மூலகாரணஸ்தாயிருக்கிறார்கள்.

இப்பொழுது ஒளிஅணு ஆராய்ச்சி நடத்திக்கொண்டு இருப்போர் பிற்கால சந்ததியின் சுகபோகங்களுக்கு அடிகோ லிக்கொண்டும் இருக்கிறார்கள்.

ஒளி அணு ஆராய்ச்சிக்காரர் வேலையின் பயன் தெரிய இரண்டு மூன்று நூற்றாண்டுகள் பிடிக்கும். அவர்களது ஆராய்ச்சியின் பயனாய் ஏதேனும் கருவிகள் கண்டுபிடிக்கப் படும்போதுதான் அவர்களது வேலை பிரத்தியட்ச பலனைத் தருகிறது.

ரேடியோ, சலனபடம், நெடுந்தூர டெலிபோன் போன்ற மக்களது நாகரிகத்தையும் சுகசௌகரியங்களையும் விருத்தி செய்யும் கருவிகள் எல்லாம் அணு ஆராய்ச்சிக்காரர் முயற்சி யின் பயனே யாகும்.

அணுக்களில் உள்ள சக்தியை எல்லாம் கிரகித்துவிட லாம் என்ற ஆசையினால் அணுவாராய்ச்சிக்காரர் அவ்வா ராய்ச்சியில் ஈடுபடவில்லை. அணுக்களிலுள்ள சக்தியை பயன்படுத்திக்கொள்ளும் முன்பு அவ்வணுக்களின் தன்மை யை அறியவேண்டுமென்ற ஆசையினாலேயே அவ்வாராய்ச்சி யில் தமது முழு கவனத்தையும் செலுத்துகிறார்கள்.

மூல ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் இயற்கையின் தத்து வங்களை அறிய முயல்கின்றனர். அவர்களது ஆராய்ச்சிப் பலனை பயன்படுத்துவோர் இயற்கையை அடக்கியாளுகின் றனர். ஆகவே அவ்விருசாரார் உழைப்பும் பிரபஞ்ச வெற் றிக்கு வேண்டற்பாலதே.

## உண்மை ஆராய்ந்தறிவதே அதிக பயன் தரத்தக்கது.

உண்மையை அறிய முயல்வது தங்கம் வெட்டியெடுக் கும் முயற்சியைவிட மிகவும் இலாபகரமான பயன் தரத் தக்கது.

உண்மையை அறிய ஆவல் கொண்டவன் மிகவும் ஆழ்ந்துஆழ்ந்து சிந்தித்துக்கொண்டே இருப்பான்; ஆராய்ந்து கொண்டே இருப்பான்.

ஜடப்பொருள்களைப்பற்றிய பிரச்சினைகள் எல்லாம் கடைசியில் சக்தியைப்பற்றிய பிரச்சினைகளாகவே முடி கின்றன.

விறகுக்கும், மின்சாரத்துக்கும் பணம் கொடுப்பவன் தனக்கு ஒரு மாதத்துக்குத் தேவையான சக்தியைப் பெற்று விட்டதாக எண்ணிக்கொள்கிறான். ஆனால் அரிசிக்கடைக் கும், ஜவுளிக்கடைக்கும் நாம் கொடுக்கும் பணத்தினாலும் சக்தியையே நாம் பெற்று வருகிறோம். நாம் அரிசியும், காய் கறிகளும் வாங்குவது அவற்றிலுள்ள மூலப் பொருள்களுக் காகவல்ல; அவற்றிலுள்ள சக்திக்காகவே. ஆடைகளையும் அவைகளில் உள்ள சக்திக்காகவே நாம் வாங்குகிறோம். அவைகளில் உள்ள ஜடப்பொருள்கள் நித்தியமானவை. நாம் ஆடையை அணிந்தாலும், களைந்தாலும், எரித்தாலும் அவைகளில் அடங்கியுள்ள ஜடப்பொருள்கள் மாறப்போவ தில்லை. ஆனால் ஆடையிலுள்ள ஜடப்பொருள்களுக்காக நாம் ஆடைகளை வாங்கவில்லை. ஆடைகளை செய்வதற்கு நெசவாளி பிரயோகித்த சக்திக்காகவே நாம் ஆடைகளை வாங்குகிறோம்.

தங்கம், வெள்ளி, செம்பு முதலியன விலை பெற்ற பொருள்களாய் மதிக்கப்படக் காரணம் என்ன? அப்பொருள் கண்டுபிடிக்கப்படுவதற்கு செலவு செய்யப்பட்ட சக்திக்கு அனுகுணமாகவே அவைகளின் விலைகளும் அமைகின்றன.

பௌதிகசாஸ்திர உண்மைகளின் பிரத்தியட்ச பலனை அறிய பல நூற்றாண்டு காத்திருக்கவேண்டிய தேவையில்லை. புதுப்பொருள்களும் சக்திகளும் கண்டுபிடிக்கப்படுந்தோறும் நாகரிகமும் முன்னேற்றமடைகிறது. சமீபகாலங்களில் கண்டு பிடிக்கப்பட்ட ஒளி அணுக்களின் சக்தி நோய்களைப் பிரிக் கப்| பெரிதும் உபயோகப்படுகிறது. ஆகவே நாளடைவில் ஒளி அணுக்களைப்பற்றி நாம் பெறும் அறிவினால் அளப் பரிய பயன் நமக்கு உண்டாக்கக்கூடுமென்பது நிச்சயம்.

— —

# கொக்கிப்புழு.

கிராமங்களில் வாழும் ஜனங்களில் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் சுறுசுறுப்பாய்க் காணப்படுகிறார்கள். அவர்கள் வெகுநாழிகை வேலைசெய்த போதிலும் சீக்கிரம் களைப்படைகிறதில்லை. தங்களது வாழ்க்கையில் மிகவும் உற்சாகங் கொண்டு, வேண்டிய பொருள் சம்பாதித்துச் சுகமடைகின்றனர். இவ்வாறு நல்ல திர்ஷடத்துடன் வாழ்பவர்கள், கொக்கிப்புழு நோயின் கொடுமைக்கு ஆளாகாமல் தப்பியவர்களே என்று நீங்கள் எப்பொழுதாவது நினைத்த துண்டா? கொக்கிப்புழு, வியாதியஸ்தனுடைய ரத்தத்தை உறிஞ்சிக் குடித்து சிறிது சிறிதாக அவனது தேக சுகத்தை வேரறுக்கிறது. உடனே கொல்லா விட்டாலும், அது அவனுடைய தேக பலத்தை முற்றிலும் கெடுத்து பல கொடிய வியாதிகள் வருவதற்கு இடமுண்டாக்குகிறது.

கொக்கிப்புழு சுமார் அரை அங்குல நீளமும், சாதாரண குண்டூசியின் அளவு கனமும் உள்ளது. அதன் வாயில் கொக்கியைப் போன்ற கூர்மையான பற்கள் உண்டு. இப்பற்களின் உதவியால் தான் அது மனிதனுடைய குடலின் உட்புறத் தசையில் தொத்திக்கொண்டிருக்கிறது. தாய்ப் புழு குடலில் ஒரு நாளைக்கு ஆயிரம் முட்டைகளுக்கு மேல் இடுகிறது. இம் முட்டைகள் மலத்துடன் வெளியேறுகின்றன. ஈரம், உஷ்ணம் இவைகள் உள்ள மண்ணின் மேல் மலத்துடன் கலந்த இம் முட்டைகள் விழுந்தால் இம் முட்டைகளிலிருந்து சிறு கொக்கிப் புழுக் குஞ்சுகள் வெளியே வருகின்றன. இச் சிறு புழுக் குஞ்சுகள் சில மாறுதலடைந்த பின், மனிதனது தோலைத் துளைத்துக் கொண்டு, அவனது தேகத்திற்குள் நுழைகின்றன. இம்மாதிரிக் குஞ்சுகள் நிறைந்த மண்ணில் வெறுங்காலுடன் நடந்து செல்பவர்களும், அவ்விடத்தில் குழிகள் முதலியவை தோண்டி அம் மண்ணைக் கையாடுபவர்களும் தான் இவ்வியாதிக்கு ஆளாகிறார்கள். சாதாரணமாக இக் குஞ்சுகள் கால் விரல்களுக்கிடையில் உள்ள மிருதுவான தோலைத் துளைத்துக் கொண்டு செல்கின்றன. இம் மாதிரி அது துளைத்துச் சென்ற இடத்தில் ஒருவித அரிப்பு

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஏற்பட்டு, சீக்கிரம் அவ்விடம் புண்ணாகிறது. இது தான் "சேற்றுப்புண்" என்று சொல்லப்படுகிறது இவ்வாறு தேகத்தில் நுழையும் குஞ்சுகள் ரத்தத்தின் மூலமாக, தேகத்தில் பல பாகங்களிலும் சுற்றிக் கடைசியில் குடலில் வந்து சேர்ந்து, அங்கேயே வசித்து விருத்தியாகின்றன. பெண் புழு பெரிதானதும் முட்டையிட ஆரம்பிக்கிறது. முன் போலவே முட்டைகள் மலத்துடன் வெளியேறி மறுபடியும் தேகத்துள் நுழைகின்றன இவ்வாறே, புழுக்குஞ்சுகள் தேகத்துள் நுழைவது, மலத்துடன் முட்டைகள் வெளியேறிக் குஞ்சுகளாகி மண் அசுத்தமாக்குவது மறுபடியும் குஞ்சுகள் தேகத்துள் நுழைவது முதலியவை திரும்பத்திரும்ப எப்பொழுதும் நடந்து கொண்டே இருக்கின்றன.

ஒரு மனிதனுடைய குடலில் உள்ள புழுக்களின் தொகைக்கும், அவன் வசிக்கும் இடத்தின் தன்மைக்கும் ஏற்றாப் போல் இவ் வியாதியின் கொடுமைகள் அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கும். சிலருடைய குடலில் மிகவும் அதிகமான புழுக்கள் இருந்தபோதிலும், அவைகள் இருப்பது வெளியில் தெரிகிறதேயில்லை. வேறு சிலருடைய குடலில் சில புழுக்களே இருந்த போதிலும், அவைகள் இருப்பது வெளியில் தெரிகிறதேயில்லை. வேறு சிலருடைய குடலில் சில புழுக்களே இருந்தபோதிலும் அவர்களிடம் இவ் வியாதியின் கொடுமை அதிகமாகத் தெரிகிறது. வியாதி லேசாய் இருந்தால், தேகம், மனம் இரண்டிலும் பலஹீனம் ஏற்பட்டு, தேகம் சிறிது வெளுத்திருக்கும். லேசான வயிற்றுவலி, தலைவலி, தலைகிறுகிறுப்பு, சில சமயங்களில் ஏற்படும் அஜீரணம், களிமண், மண் காகிதம், சாம்பல் இவைகளைத் தின்பதற்கும் ஏற்படும் தடுக்க முடியாத ஆவல் இவைகளே கொக்கிப்புழு வியாதியின் அறிகுறிகள். வியாதி மிகவும் கடுமையாய் இருந்தால், கால்களும் பாதங்களும் வீங்கி, தேகமெங்கும் மிகவும் வெளுத்து, சதைப்பற்றுக் குறைந்து எலும்பும் தோலுமாகி, வயிறு பெருத்து, கன்னங்கள் ஊதலெடுத்து, மூளை மழுங்கி மிகவும் பலஹீனம் ஏற்படும். கர்ப்ப ஸ்திரீகளுடைய கர்ப்பம் குலைந்து போகும்.

கொக்கிப்புழு வியாதி, வியாதியஸ்தர்களுடைய வேலை செய்யும் சக்தியை குறைக்கிறது. ஆதனால் அவர்கள் தங்களுடைய பிழைப்புக்கு வேண்டிய பொருள்கள் சம்பாதிக்கமுடியாமல்கஷ்டப்படுவார்கள். குழந்தைகளுக்கு இவ்வியாதி வந்

தால், அவர்களது வளர்ச்சிதுன்றி, விருத்தி குறைகிறது. அவர்களுடைய தேகத்தில் இரத்தம் குறைந்து வெளுத்துப்போய், அவர்களால் தேகத்தினாலும், மனத்தினாலும் வேலை செய்ய முடிகிறதில்லை. அவர்களுடைய புத்தி மழுங்கி, வாலிபத்தில் (இளம் பருவத்தில்) இருக்கவேண்டிய பலமும், உற்சாகமும் இல்லாமல போகிறது. அவர்கள் தேக பலத்திலும், மனோ பலத்திலும் விருத்தியடைந்து சிறந்த ஆண் மகனாகவும், பெண்மணியாகவும் ஒருபோதும் ஆகிறதேயில்லை.

இவ்வியாதியை எளிதில் கண்டுபிடித்து, வைத்தியம் செய்து சௌக்கியமாக்கலாம். மலத்திலுள்ள முட்டைகளை அணுதரிசினி என்னும் பூதக்கண்ணாடியின் மூலம் கண்டுபிடிக்கலாம். மலத்தில் முட்டைகள் இருந்தால் குடலில் பெரிய புழுக்கள் இருக்கின்றன என்பது நிச்சயம். ஏனெனில் பெரிய புழுக்கள் இல்லாமல் முட்டைகள் வாராதல்லவா? குடலில் வாழும் இப்புழுக்களைக் கொன்று வெளியேற்றுவதற்குத் தகுந்த சக்தியுள்ள மருந்துகள் பல இருக்கின்றன. சில சமயம் ஒருவேளை மருந்து சாப்பிட்டபோதிலும் வியாதி குணமாகிறது. எல்லாக் கவர்ன்மெண்டு (சர்க்கார்) ஆஸ்பத்திரிகளிலும் லோக்கல்பண்டு ஆஸ்பத்திரிகளிலும் கொக்கிப்புழு வியாதிக்கு இனாமாக வைத்தியம் செய்யப்படுகிறது. நீங்கள் இவ்வியாதியால் அவஸ்தைப்பட்டால், உடனே சென்று மருந்து சாப்பிடுங்கள். அதனால் உங்களுக்கு சுகமும், சந்தோஷமும் உண்டாகும்.

இவ்வாறு நீங்கள் சௌக்கியமடைந்தபின், மறுபடியும் இவ்வியாதி வாராமல் காத்துக்கொள்ளவேண்டும். மண்ணில் கொக்கிப்புழுக் குஞ்சுகள் நிறைந்திருக்கும்படி விட்டால் இவ்வியாதி மறுபடியும் வந்துவிடும். திறந்த வெளிகளில் கண்டபடி மலம் கழிக்கக்கூடாது.

—நல்வழி.

---

# தமிழர்த் தகவுரை.

(மன்னார்குடி ம. சண்முகதாசன் இயற்றியது)

அந்தணர் ஆரிய சந்ததி யன்று
ஆரியரொழுக்கம் பாரினுக் காகா
இந்தியாம் பாஷையோ சிந்தியாதது
ஈரமில் நெஞ்சர் மண்பாரமென் றெண்
உயர் குலத்தவர் நிலத்துயர் களைபவரே
ஊறிய மடமை நீறிடச் செய்
எத்திப் பிழைப்பாரோ டொத்துழையாதே
ஏய்ப்பவ ரெவரும் பேய்க்கண மெனக்கொள்
ஐயப்பாடில்லா வையப்பாடே சரி
ஒத்து ஒத்தென்பருன் மத்தரென் றெண்
ஓர் மனப்பான்மையே சீருறு மருந்து
ஔவையா ரின்னுரைச் செவ்வி தாமறி

கல்விக்கிணையிலை வல்வினை யகற்ற
கன்மனத்தோரெலாந் தன்னலப் புலிகள்
காங்கரஸ் போர்வையோ தீங்கினர்க்காண்
காந்தியென் றுளரும் பிராந்தியாகாது
கிள்ளை நேர்ப்புலமையோர்க் கள்வரிலொருவர்
கிருக்குச் செயல்மிக் கிருப்பவர் நாக்கி
கீழ்மேல் வகுப்புத் தாழ்வாந் தொகுப்பு
குறுகிய நோக்கு அருகிடத் தாக்கு
கூடியவிரைவில் நாடுவாழ்ந்திட நட
கெடுமதிகழகக் கொடுநூ லகற்று
கேவலமார்க்க ஆவ லாகாது
கைம் பெண்ணிற்கு முண்டைம் புல னுணர்ச்சி
கொடுங்கோற் கதிகப்படும் பார்ப்பனீயம்
கோசல கோமயப்பூசனை மற
கௌரவப் புளுகர்கள் பௌராணிகரே

சதுர்மறையுலகப் பொதுமறை யாகா
சாதிக்கொடுமைகள் ஆதியி லில்லை
சிறுபான்மைக் கழகொரு கோட்பாடு
சீர்பெற்றிட மனஆர்வ முற்றிரு
சுய நலக்கும்பலைத் தயவிலா தகற்று
சூத்திரனென்போன் க்ஷத்திரியின்மகனாம்
செகதலப்புரட்டர் தன்முகமெதிர்ப்படாதே
சேரித்திருந்துதல் ஊரினுக்குதவி
சைவஷியமமுன் பையர்கட்கில்லை
சொர்க்கத்திற்கென்று நம்வர்க்கத்திலேன்வரி
சோற்றுத் துருத்தியில் மாற்றுயர்வேது
சௌக்கியம் அனைவரும் ஐக்கியம் ஆதல்

தர்ப்பையின் ஆட்சி அற்பமென்றறி
தானம் புரிக்கிடில் ஈனப்படாதிரு
திருவுலாப்பிரமலம் மருவிலாதல்ல
தீர்த்தமேயெனினும் பார்த்துபயோகி
துரைமார்க்குண்டோ தரை சார்த்திண்டல்
தூய்மையடைந்தோர் வாய்மையுள்ளோரே
தெட்சணை ஆரிய ரட்சணைச்சொல்
தேனினுமினியதே மானிலத்தமிழ்
தையலர்க்கனீதி செய்யலாகாது
தொன்மையாந் தண்டமிழன்னையார்க் கடிபணி
தோட்டியும் நமது நாட்டுழைப்பாளி

நற்றமிழ் இகத்திற்கொற்ற மென்றெண்
நாற்றலங்கற்பனையாற் கலவரமே
நிதியுளாரெனினும் மதியிலா ரெளியோர்
நிர்தாக்ஷண்யக் கர்த்தாக்களாரியர்
நீசப்பிறவியாம் மோசச் செயலுளோர்
நுதற்குறிபல நிகழ்வதற் கனுகூலம்
நூற்றோளணிவோர் மாற்றாரடிமை
நெய்பாற்றயிர் நமை வைவார்க்கிடாதே

நேர்மைச் சாதனம் ஓர்மைத் தனமே
நையாண்டிக்கிடம் பொய் நூற்கிணங்கல்
நொண்டிப் பரிவுரைக் கொண்டிடத்தகா
நோக்கா மறையின் போக்காகாது

*பஞ்சகத் தொழிலில் வஞ்சகமிகுதி
பாபநிவாரண ஆபத்தையறி
பிதிர்க்கடனெனல் மிகுவதிர்ப்தியச் சடங்கு
பீடையிற்பெரிதுகம் பாடையை யிழத்தல்
புத்திக்கு ஒத்ததாம் சித்தர்தன் பொன்மொழி
பூரணசுதந்தரக் காரணங் கண்டுவாழ்
பூதேவரென்றுளோர் மூதேவி யம்சம்
பெண்களின் உரிமையுங் கண்கணித்திரு
பேதபுத்தியதே வாதனைக்கிடமாம்
பைசாச பாவனைப் பொய்தாதென்றேண்
பொறுமையே பெரிதெனில் உரிமையிலன்று
போனகப்பிரியரோ வானகமளிப்பவர்?
பௌண்டரீகப்படை மௌடிக மகற்று

மதக்குருக்களிற்பல விதப்பிணக்குண்டு
மனுநீதி நம்மனோர்க் கனுகூலச் சத்துரு
மாசியக்கொள்கையோர் மோசடிச் செயலே
மிகுதிப்பொருளைத் தகுதிக்களித்திடு
மீளாப்பழி நலங் கேளாதவர்க்கே
முன்பின்யோசனை நன்மைக்கிடமாம்
மூடிய இழுக்கு நீடித்திராது
மெய்யலப்பற்பலத் தெய்வக் கற்பனை
மேலாங்குலமணி நூலான்று
மைந்தர்கட் காஸ்திப் பைந் தமிழ்ப் பொக்கிஷம்
மொட்டைச்சடங்கினால் மட்டிலாப்பெண்பழி
மோட்சப்பிரச்சினை ஆட்சேப மற்றது
மௌனமாயிராதே கௌரவங்கெடுமெனில்

(* பஞ்சாங்கம்)

யதார்த்தமாவன சதாத்தியானி
யாகம்நமக்கு பயோகப்படாதது
யூகக்குறிப்புயர் தமிழகத்திருப்பன்று
யூகித்துணர்தலுற் சாகத்திற்குரியது
யோகமார்க்கம்பல தேசத்தார்க்கும் பொது
யௌவன ஆக்கம் ஔவண வாக்கும்
வண்டமிழ்வாரிதி யுண்டவருயர்ந்தோர்
வாழ்விற்பொதுநலக் தாழ்விலாதாக்கும்
விகற்பத்தன்மையே மிகப்பெருங்கேடு
வீணாடம்பரம் வாணாட் கழிவாம்
வெறுப்புக்கிடமாம் செருப்புத்தானம்
வேதியர் பற்பல சாதியிலுண்டு
வையத்தாருளம் நையாதுகந்துவாழ்

---

## காலால் எழுதுகிறான்

வங்காளத்திலுள்ள கிஷோரிகஞ் என்ற நகரிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் மாணாக்கன் ஒருவனுக்கு இரண்டு கைகளும் இல்லை. அதனால் அவன் தனது காலின் உதவியால் எழுதப் பழகியிருக்கிறான். வலது காலில் பெரு விரலுக்குப் பக்கத்தில் பேனாவைக் கையில் பிடித்துக் கொள்வது போல் பிடித்துக் கொள்கிறான்.

எவ்வித சிரமுமில்லாமல் அவன் சௌகரியமாக எழுதுகிறானாம். அவனது பெயர் அப்துல் கல்கி என்பது.

---

## தானாக மூடும் ஜன்னல்கள்

ஜெர்மனி தேசத்திலுள்ளவர் இனி இரவில் ஜன்னல்களை மூட எழுந்திருக்க வேண்டிய அவசிய மில்லை. ஏன்? அங்கு சீதோஷ்ண நிலைமைக்குத் தகுந்தவாறு கதவுகளை மூடிக்கொள்ளும் ஜன்னல்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இரவில் படுக்கைக்குப் போகும் போது ஜன்னல் கதவுகளை நன்றாகத் திறந்து வைக்கலாம். நள்ளிரவில் பனிக் காற்று வீசும் போது அக்காற்றை உள்ளே நுழைய விடாதபடி ஜன்னல் கதவுகள் தாமாகவே மூடிக் கொள்கின்றன.

# அபேதவாதமும் சமூக சீர்திருத்தமும்.

## C. N. A.

சீர்திருத்த முயற்சிகளுக்கு பிராமணர்கள் பரம சத்துருக்கள். அரசியல் சீர்திருத்தத் துறையிலும் சில பொருளாதாரச் சீர்திருத்தத் துறைகளிலும் பிராமணர்களே முன்னிலையில் நிற்கிறார்கள். ஆனால் ஜாதியை ஒழிப்பதற்காகத் தோன்றியுள்ள இயக்கங்களில் அவர்கள் முக்கியமாகப் பங்கு கொள்வதே இல்லை. எதிர்காலத்திலாவது அவர்கள் முக்கிய பங்கு எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புவதற்காவது இடமிருக்கிறதா? அதுவுமில்லை. ஏன் என்று நீங்கள் கேட்கலாம். சமூகச் சீர்திருத்தத்துக்கு பிராமணர்கள் முட்டுக்கட்டையாக இருக்கமாட்டார்கள் என்று கூட நீங்கள் கூறலாம். ஹிந்து சமூகத்துக்கு ஜாதி ஒரு களங்கமாயிருப்பதை பிராமணர்கள் அறிவார்கள் என்றும் அறிவாளிகளான பிராமணர்கள் ஜாதியினால் ஏற்படக்கூடிய தீமைகளைச் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள் என்றும் நீங்கள் சொல்லலாம். பிராமணர்களுக்குள் லௌகிக பிராமணர்களும் வைதீக பிராமணர்களும் இருந்திருக்கிறார்கள் என்றும் வைதீக பிராமணர்கள் ஜாதியொழிப்பை ஆதரிக்காவிட்டாலும் லௌகிக பிராமணர்கள் ஆதரிப்பார்கள் என்றும் நீங்கள் தெரிவிக்கலாம். வெளிப்பார்வைக்கு நீங்கள் கூறுவனவெல்லாம் சரியானவைகளாகவே தோன்றுகின்றன. ஆனால் ஜாதி ஒழிந்தால் பிராமண சமூகத்துக்குப் பேராபத்து உண்டாகுமென்பதை அனேகர் உணர்வதில்லை. எனவே பிராமண சமூகத்தின் சக்தியையும், செல்வாக்கையும் ஒழிக்கக்கூடிய ஜாதி ஒழிப்பு இயக்கத்தை பிராமணர்கள் ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியுமா? பிராமணர்களை லௌகிக பிராமணர்கள் என்றும் வைதீக பிராமணர்கள் என்றும் இரு பிரிவாகப் பிரிப்பதும் லௌகிக பிராமணர்கள் முற்போக்காளராயிருப்பார்கள் என நம்புவதும் முட்டாள்தனமாகும். இருசாராரும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் இருவரும் ஒரு உடம்பின் இரு கைகளாயிருக்கிறார்

கள். எனவே ஒரு கையைக் காப்பாற்ற மற்ற கை போராடத்தான் செய்யும்.

## சமூக அமைப்பு.

உங்கள் சமூக அமைப்பை மாற்றாமல் ஒரு அங்குல அளவாவது முன்னேறிச் செல்ல முடியவே செய்யாது. தேசத்தைப்பாதுகாக்கவோ அல்லது வேறு தேசங்களோடு போர் தொடுக்கவோ ஜனங்களை ஒன்று திரட்ட முடியாது. ஜாதியைச் அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு எந்த கட்டிடத்தையுமே கட்ட முடியாது "நேஷனை" உருப்படுத்தவும் முடியாது; ஒழுக்கத்தை வளர்க்கவும் முடியாது. ஜாதியை ஆதாரமாக வைத்துக்கொண்டு செய்யப்படும் எதுவும் உருப்படவே செய்யாது, அழிவது நிச்சயம். ஆகவே ஹிந்து சமூகத்தை எப்படிச் சீர்திருத்துவது? ஜாதியை எப்படி ஒழிப்பது என்பவைகளை இப்பொழுது முக்கிய பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. ஜாதியைச் சீர்திருத்துவதற்கு உப ஜாதியை ஒழிப்பதே ஏற்ற முதல் வழி என ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது. ஜாதிகளுக்குள் இருப்பதைவிட உப ஜாதிகளுக்குள் ஒழுக்கத்திலும் அந்தஸ்திலும் மிக்க ஒற்றுமை இருக்கிறதென்ற நம்பிக்கையே அந்த அபிப்பிராயத்துக்குக் காரணமாகும் ஆனால் இது தவறான முடிவென்றே நான் கருதுகிறேன். வடநாட்டு பிராமணர்கள், தெக்காணத்து பிராமணர்களையும் தென்னிந்திய பிராமணர்களையும் விட சமூக அந்தஸ்தில் மிகவும் கீழான நிலைமையிலேயே இருந்து வருகிறார்கள். வடநாட்டு பிராமணர்களும் மத்திய இந்தி பிராமணர்களும் சமையற்காரராயும் தண்ணீர் எடுப்போராயுமே இருந்து வருகிறார்கள். தெக்காண பிராமணர்களும் தென்னிந்திய பிராமணர்களும் சமூக வாழ்வில் மிக அந்தஸ்தான நிலைமையிலிருக்கிறார்கள். மற்றும் வட இந்தியாவில் வைசியர்களும், காயஸ்தர்களும் தெக்காணபிராமணர்களுக்கும் தென்னிந்திய பிராமணர்களுக்கும் சமமான அந்தஸ்தில் இருந்து வருகிறார்கள். மற்றும் தெக்காண பிராமணர்களும் தென்னிந்திய பிராமணர்களும் சைவ உணவுகாரர். காஷ்மீர் பிராமணர்களும் வங்காள பிராமணர்களும் மாமிச உணவுகாரர் எனவே உணவு விஷயத்திலும் அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. ஆனால் தெக்காண பிராமணர்களுக்கும் உணவு விஷயத்தில் குஜராத்திகள், மார்வாரிகள் பனியாக்கள் ஜெயினர்கள் முதலிய பிராமணரல்லாதாரோடு ஒற்றுமை

காணப்படுகிறது. எனவே சைவ உணவுக்காரரான பிராமணரல்லாதார் சைவ பிராமணர்கள் ஜாதியில் சுலுவாகச் சேர்த்து கொள்ள வசதியிருக்கிறது. வட இந்தியா காயஸ்தர்களையும் தென்னிந்தியாவிலுள்ள இதர பிராமணரல்லாதாரையும் ஒன்று சேர்ப்பது அருப சாத்தியமாக இருக்கிறது.

## சதுர்வாணீயம்.

பார்ப்பனர்தான் கல்விகற்று அறிவை பெருக்கவேண்டும்; க்ஷத்திரியர்தான் ஆயுதம் தாங்கி போர்புரிய வேண்டும்; வைசியர்தான் வர்த்தகம் விவசாயம் செய்யவேண்டும்; சூத்திரர்தான் அடிமைத்தொழில் செய்ய வேண்டும் என்று கூறுவது வெகு சுலுவரனதாயும் உத்தமமானதாயும் தோன்றலாம் ஆனால் கிரியாம்சையில் அதனால் என்ன நேரும்? கொஞ்சம் பேருக்காக பெரும்பாலரின் ஆயுதந்தாங்கும் உரிமை பறிமுதலாக நேரும். கொஞ்சம் பேர் ஜீவித வெற்றியும் அறிவும் பெறுவதற்காக பெரும்பாலர் தோல்வியும் மடமையும் பெறும்படி நேரும். உலகத்திலே தன் சொந்த சமூக ஊழல்களைப் பாமர மக்கள் சகித்துக்கொண்டிருக்கக் காரணம் என்ன? உலகத்திலுள்ள அனேக தேசங்களில் சமூகப் புரட்சிகள் உண்டாயிருக்கின்றன. இந்தியாவில் மட்டும் ஏன் சமூகப் புரட்சி உண்டாகவில்லை? இதைப்பற்றி தான் வெகுநாள் யோசனை செய்தேன் அந்த கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் எனக்குக் கிடைத்தது. அதாவது சதுர்வர்ணீயக் கொடுமையினால் பாமர மக்கள் துர்பலராக்கப்பட்டிருப்பதினால் அவர்களுக்குப் புரட்சி செய்ய ஆற்றல் இல்லை. அவர்களுக்கு அயுதந் தாங்கமுடியாது; ஆயுதமின்றி புரட்சியில் வெற்றி பெற முடியாது. அவர்கள் எல்லாம் உழவர்கள். ஏரைக்கட்டி அழ வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் பட்டிருப்பவர்கள். கொழுவைவாளாக மாற்றிக் கொள்ள அவர்களுக்கு அனுமதி யளிக்கப்படவில்லை. உரிமையில்லை. சதுர்வர்ணீயக் கொடுமையினால் அவர்களுக்குக் கல்வி கற்கவும் முடியவில்லை. மோட்சத்துக்கு வழிதேடவோ அறியவோ அவர்களால் முடியவுமில்லை. எந்நாளும் அடிமைகளாகவே இருக்க வேண்டுமென்று அமிழ்த்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். விடுதலை பெற வழி தெரியாமல் அடிமை வாழ்வு போதுமென்று திருப்தியடைந்துவிட்டார்கள். சதுர்வர்ணீயத்தைப் போல் மானக்கேடானது வேறு இல்லவே இல்லை. அது மக்களை முயற்சியற்றவராக்கிவிட்டது. சுதந்

தரம், பெருமை, புகழ் முதலியன நிரம்பியிருந்தகாலம் இந்திய சரித்திரத்திலே ஒரு ஒரு காலந்தான் உண்டு.

அது மௌரிய சாம்ராஜ்ய காலமே மற்ற காலங்களில் இந்தியாவில் தோல்வியும் அறியாமையுமே குடிகொண்டிருந்தது.

## சதுர்வர்ணீயத்துக்கு சாவுமணி.

ஆனால் மௌரிய மன்னர்கள் காலத்திலே சதுர்வர்ணீயத்துக்குச் சாவுமணி யடிக்கப்பட்டது. பாமர மக்களான சூத்திரர்கள் நாட்டாண்மைக்காரரானார்கள். சதுர்வர்ணீயம் வலுப் பெற்றிருந்த காலத்திற்றான் இந்தியாவுக்குத் தோல்வியும், அழிவும் ஏற்பட்டது.

நாம் ஒரு கூட்டத்தாரை நாகரிகப்படுத்த முயன்றால் நாமும் அவர்களின் ஒருவராக பாவித்து அவர்களுடன் ஊடாடிப் பழகி அவர்களுடைய சுகதுக்கங்களில் பங்கு கொண்டு ஒத்துணர்ச்சியையும் அநுதாப உணர்ச்சியையும் விருத்தி செய்தால் தான் நமது முயற்சி பயனடையும். ஆனால் அவ்வாறு செய்ய எந்த ஹிந்துக்காவது முடியுமா? தத்தம் ஜாதியாச்சாரங்களைப் பாதுகாப்பதே ஹிந்துக்களின் ஜீவித லக்ஷ்யமாக இருந்து வருகிறது. ஜாதியே ஹிந்துக்களின் விலை மதியா சொத்து; அதை எப்பாடு பட்டாவது அவர்கள் காப்பாற்றித் தீர வேண்டும். வேத கால ஆசாரியர்களான இந்தியப் பூர்வ குடிகளுடன் உறவாடித் தமது ஜாதிப் பெருமையை இந்துக்கள் இடிக்க முடியாது. வீழ்ச்சி யடைந்தவர்களுக்கு உதவி புரிய வேண்டியது முக்கியமான கடமை யென்பதை ஹிந்துக்கள் உணராமல் இல்லை. ஆனால் அந்தக் கடமையை விட நமது ஜாதியாச்சாரங்களைக் காப்பதே ஹிந்துக்களின் மிக மேலான கடமையாக இருக்கிறது. இந்தியா உயரிய நாகரிக மடையாமல் இருந்ததற்கும் அதைப்பார்த்து ஹிந்துக்கள் வருந்தப் படவோ செய்யாமல் இருந்த தற்கும் ஜாதியே முக்கிய காரண மாகும்.

"ஒரு வகுப்பார் மற்றொருவகுப்பாரை அடிமைப்படுத்தி கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கும் வரை இந்தியாவிலே ஒரு சுதந்தர சமூகத்தை நிலை நாட்ட முடியு மென்று நான் நம்பவில்லை. எனினும் அபேதவாத லக்ஷ்யத்தில் எனக்கும்

பூரண நம்பிக்கையிருப்பதினால் பல திறப்பட்ட வகுப்பார்க்குள்ளும் சமத்துவம் ஏற்படுமென்று நான் நம்புகிறேன். எல்லாப் பிரச்சினைகளுக்கும் அபேதவாதமே சரியான முடிவென்று நான் நம்புகிறேன்'' என காங்கரஸ் தலைவரான ஒரு பிராமணர் கூறுகிறார்.

## ஜாதி ஒழிக்கவேண்டும்.

ஆனால் நான் ஒரு கேள்வி கேட்கிறேன் அபேதவாதம் அமுலுக்கு வரும்போது எல்லா சமூகங்களுக்குள்ளும் சமத்துவம் ஏற்படுமென்று நம்பினால் மட்டும் போதுமோ? அந்த நம்பிக்கை ஒன்றே போதுமானது யென்று கூறுவது அபேதவாதக் கொள்கைகளை நன்குணராதவர்கள் கூற்றாகும். அபேதவாதம் வெகு காலத்துக்குப்பின் அமுலுக்கு வரப்போகிற ஒரு லக்ஷ்யமாக இராமல் கிரியாம்சையில் நடத்திக் காட்டக்கூடிய ஒரு திட்டமாக இருக்கும் பக்ஷத்தில் அபேதவாதி கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் என்னவெனில் அவனுக்கு சமத்துவத்தில் நம்பிக்கையுண்டா? இல்லையா? என்பதல்ல. சமூக ஏற்பாடு காரணமாகவோ ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரைக் கொடுமைபடுத்துவதை அவன் ஆதரிக்கிறானா? ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரை மேற்கொண்டும் கொடுமைப் படுத்துவதை சகித்துக்கொண்டிருப்பானா? இந்த கேள்விகளின் உட்பொருளை சகலரும் உணரும் பொருட்டு என் கருத்தைக் கொஞ்சம்கூட விளக்கிக் கூறுகிறேன். ஒரு சமூகப் புரட்சியுண்டாகாமல் அபேதவாதிகள் விரும்பும் பொருளாதார சுதந்திரம் ஏற்படப்போவதில்லையென்பது நிச்சயம். புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்கைப்பற்ற வேண்டுமானால் ஏழை எளியோர் முன் வந்துதான் ஆகவேண்டும். அத்தகைய ஒரு புரட்சி செய்ய இந்திய பாமர ஜனங்கள் ஏனையோருடன் சேருவார்களா? மக்களுக்குள் அத்தகைய ஏகோபித்த ஒற்றுமை ஏற்படத் தூண்டுதலாயிருக்க வேண்டியது எது? ஏனையோர் தம்மை சமத்துவமாகவும் சகோதர பாவனையிலும் நீதியாகவும் நடத்துகிறார்கள் என்ற நம்பிக்கையிருந்தால் தான் பாமர ஜனங்கள் மற்றவர்களுடன் சேருவார்கள். புரட்சிக்குப்பின் தம்மை சரிநிகர் சமானமாக நடத்துவார்கள் என்றும் ஜாதி மத வித்தியாசம் பார்க்க மாட்டார்கள் என்றும் பாமர ஜனங்கள் நம்பவில்லையானால் அவர்கள் ஏனையோருடன் சேர்ந்து புரட்சி செய்ய முன்வருவார்களா? புரட்சியைத்

தலைமை வகித்து நடத்தும் அபேதவாதியும் தனக்கு ஜாதியில் நம்பிக்கையில்லையென்று மட்டும் கூறினால் போதாது. புரட்சியில் ஈடுபடுவோர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் சமத்துவ சகோதர உணர்ச்சி தோன்ற வேண்டும். நிலை பெற்றிருக்க வேண்டும். ஏழை பணக்காரர் என்ற பேதத்தைத் தவிர வேறு பேதங்கள் இல்லையென்று இந்திய பாமர ஜனங்கள் உண்மையாகவே நம்புகிறார்கள் என யாருக்காவது கூற முடியுமா? ஏழை எளியோருக்குள்ளே ஜாதி மத வித்தியாசங்கள் இல்லையென்று யாருக்காவது கூற முடியுமா? ஜாதி மத வித்தியாசங்கள் இருந்தால் இந்தியர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து புரட்சி செய்வது சாத்தியமா? இந்தியாவில் ஒரு புரட்சி தோன்றி அபேதவாதிகள் வெற்றி பெற்று அரசியலைக் கைப்பற்றிக் கொண்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த விசேஷ நிலைமை ஏற்பட்ட பிறகு சமூகப் பிரச்சினைகளை அபேதவாதிகளுக்கு தீர்த்துவைக்க முடியுமா? ஜாதி உயர்வு தாழ்வுப் பிரச்சினையை முடிவு செய்யாமல் ஒரு வினாடி நேரமாவது அபேதவாத அரசியல் நடைபெற முடியாது என்பது நிச்சயம். வாய்ப்பந்தல் போட்டு வெறும் வார்த்தைகளால மழுப்பாமல் உண்மையான பொருளாதார சுதந்திரம் ஏற்பட அபேதவாதிகள் அந்தரங்க சுத்தியாக விரும்பினால் ஜாதி, உயர்வு, தாழ்வை ஒழிக்கத்தான் வேண்டும். எனவே சமூக சீர்திருத்தம் செய்ய வேண்டியதே அபேதவாதியின் முதல் வேலை. சமூகச் சீர்திருத்தம் செய்யாமல் புரட்சி நடத்தவே முடியாது. ஒருகால் அதிர்ஷ்டவசமாக புரட்சி வெற்றி பெற்றாலும் அவனது உண்மையான லட்சியம் கைகூட வேண்டுமானால் சமூக சீர்திருத்தம் செய்து தான் ஆக வேண்டும். புரட்சிக்கு முன் ஜாதியை ஒழிக்க அவர் முயலவில்லையானால் புரட்சிக்குபின் ஜாதியை ஒழிக்க அவன் கட்டாயப் படுத்துவது நிச்சயம். அதாவது எந்தச் சீர்திருத்தம் செய்ய விரும்பினாலும் ஜாதி பேய் முட்டுக் கட்டை போடுவதைக் காணலாம். எனவே அந்த ஜாதிப் பேயை ஒழிக்காமல் அரசியல் சீர்திருத்தமோ பொருளாதாரச் சீர்திருத்தமோ ஏற்படப் போவதே இல்லை.

## தோல்வியடையக் காரணம் என்ன?

அப்படியானால் சமூக சீர்திருத்தக் கட்சியார் தோல்வியடையக்காரணம் என்ன? அந்தக்காரணத்தை சரியாக உணர வேண்டுமானால், அக்காலத்திய சீர்திருத்தக்காரர்கள் எத்த

மையை சீர்திருத்தங்கள் பெற கிளர்ச்சி செய்தார்கள் என்பதை ஆராயவேண்டும். இந்த சந்தர்ப்பத்தின் சமூகச் சீர்திருத் தத்தை இந்து குடும்பச் சீர்திருத்த மென்றும் இந்து சமூக அமைப்புச் சீர்திருத்தம் அல்லது புனருத்தாரணம் என்றும் இரண்டு பிரிவாகப் பிரிக்கத் தேவையுண்டாகிறது. விதவா விவாகம், பாலிய விவாகம் முதலியன குடும்பச் சீர்திருத்தத் தைச் சேர்ந்தவை. ஜாதி வித்தியாசத்தை ஒழிப்பது ஹிந்து சமூக அமைப்பைப் புனருத்தாரணம் செய்வதைச் சேர்ந்தது. சமூக சீர்திருத்தக் கட்சியார் ஹிந்து குடும்பச் சீர்திருத்தத் திலே முக்கியமாக கவனம் செலுத்தி வந்தார்கள். அந்தக் கட்சியில் படிப்பாளிகளான உயர்ந்த ஜாதி ஹிந்துக்களே அதிகமாக இருந்தார்கள். ஜாதியை ஒழிக்க வேண்டும் என்று கிளர்ச்சிசெய்யவேண்டியநிலைமையை அவர்கள் உணரவில்லை அல்லது அவ்வாறு கிளர்ச்சி செய்ய அவர்கள் மனவுறுதியு டையவர்களாயிருக்க வில்லை. எனவே கட்டாய வைதவ்யம் பாலிய விவாகம் முதலிய தீமைகளை ஒழிக்கவே அவர்கள் முயற்சி செய்தார்கள். அந்தத் தீமைகள் அவர்கள் சமூகத்தி லிருந்து வந்தன. அத்தீமைகளின் பலனை அவர்களில் பலர் அனுபவித்தும் இருந்தார்கள். ஹிந்து சமூகத்தைத்திருத்தி யமைக்க அவர்கள் முயல வில்லை. அவர்கள் நடத்திய சீர் திருத்தப்போர் குடும்ப சீர்திருத்தத்தை மட்டும் பாதிக்கக் கூடியதாக இருந்தது. ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கும் சீர்திருத்தத்தை மட்டும் பாதிக்கக்கூடியதாக இருந்தது. ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கும் சீர்திருத்தத்தை பாதிக்க வில்லை. அந்தப் பிரச்சினையை சீர்திருத்தக்காரர்கள் தமது திட்டத்தில் சேர்க்கவுமில்லை அதனாலேயே சமூகச்சீர்தி ருத்தக் கட்சியார் தோல்வியடைந்தனர். இதனால் சமூகச் சீர்திருத்தத்தை விட அரசியல் சீர்திருத்தமே முதலில் வேண் டியது என்றோ முடிவேற்பட்டு விட்டதாக எவரும் எண்ணக்கூடாது. அதனால் சமூகச் சீர்தி ருத்தக் கட்சியார் தோல்வியடைந்த காரணம் தான் வெளியாயிற்று. மற்றும் அரசியல் சீர்திருத்தக்காரர் பெற்ற வெற்றி மிகவும் அற்பமானதென்றும் சமூக சீர்திருத்தம் என்பது குடும்பச் சீர்திருத்தமாக மதிக்கப்படும்போதுதான் அரசியல் சீர்திருத்தத்துக்கு முன் சமூகச்சீர்திருத்தம் தேவை யில்லையென்ற அபிப்பிராயத்திற்கு மதிப்புண்டு என்பதும் விளங்கிவிட்டது. இந்திய சமூக அமைப்பைத் திருத்தி அமைக்கவேண்டுமானால் அரசியல் சீர்திருத்தத்துக்கு முன் சமூக சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்ற எனது கொள்கை

யை ஒருவராலும் மறுக்க முடியாது அரசியல் அமைப்பை உருபடுத்தும் தலைவர்கள் சமூக பிரச்சினைகளை முக்கியமாக கவனிக்க வேண்டுமென கார்ல் மார்க்ஸின் நண்பரும் சகபாடியுமான பெர்டினண்டு லாஸேல் கூட கூறியிருக்கிறார்.

அரசியல் அமைப்பு சமூக அமைப்பை பொருத்திருக்க வேண்டும் என்பது அதன் தத்துவம் என்பதே என்து அபிப்பிராயம் அரசியல் பிரச்சினைகளுக்கும் சமூகப்பிரச்சினைகளுக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லையெனக் கூறிய இந்திய அரசியல் வாதிகள், அரசியல் அமைப்பு வகுக்கும் போது சமூகப் பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்ளுமாறு வகுப்புத்தீர்ப்பு தூண்டியிருக்கிறது. இந்திய அரசியல் வாதிகள் சமூக சீர்திருத்தத்தை அலக்ஷ்யம் செய்த பாபப்ரிகாரத்துக்காகவே வகுப்பு தீர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அது சமூகச் சீர்திருத்தக் கட்சிக்கு ஒரு பெரிய வெற்றியாகும். சமூக சீர்திருத்த வாதிகளுக்கும் அரசியல் சீர்திருத்த வாதிகளுக்கும் நடைபெற்ற போரில் சமூக சீர்திருத்த வாதிகள் தோல்வியடைந்த போதிலும் அவர்கள் அபிப்பிராயமே சரியென்பதை வகுப்புத் தீர்ப்பு வற்புறுத்தி விட்டது.

சமூக சீர்திருத்தத்துக்குள்ள வழி— இந்தியாவைப் பொருத்த வரையில் சுவர்க்கத்துக்குள்ள வழிபோல கரடு முரடானது, சங்கடமானது-ஆபத்துக்கள் நிறைந்தது. இந்தியாவில் சமூகச் சீர்திருத்தத்துக்கு நண்பர்கள் சிலரே; எதிரிகளோ அதிகம்; எதிரிகள் இருவகை; ஒரு கூட்டத்தார் அரசியல் சீர்திருத்தக்காரர். மற்றவர்கள் அபேத வாதிகள்.

---

## சினிமாவில் டெலிவிஷன்.

சினிமா படங்களில் டெலிவிஷன் கருவிகளை உபயோகிக்க டெலிவிஷன் கம்பெனி ஆரம்பித்திருக்கிறது. பிரிட்டிஷ் காமண்ட் கார்ப்பரேஷன் கம்பெனி இதற்கு வழிகாட்டியாக இருக்கும். 6X8 அடியுள்ள திரையில் டெலிவிஷன் அமைந்த படங்களைக் காட்ட புதிய கருவிகள் உற்பத்தியாகி வருகின்றன. லண்டன் முழுவதும் ஒரே நேரத்தில் பார்க்கும் படி ஏற்பாடு செய்யப்படுமென்று டெலிவிஷன் கண்டுபிடித்த ஸ்காட் லாந்து வாசியான ஜான்லோகி போர்டு கூறினார்.

# தெரியுமா?

பூர்வீக காலத்தில் யானைகளுக்குப் பதினான்கு அடி நீல முள்ள தந்தங்களிருந்தனவாம்.

ஃ ஃ ஃ

அமெரிக்காவில் ஒரு கோடி மக்கள் "செயற்கைப் பல்" கட்டிக்கொள்கிறார்களாம்.

ஃ ஃ ஃ

மாரிக்காலத்தைவிட கோடைக்காலத்திலேயே சுத்த ஜலத்தில் பிராணவாயு அதிகம் இருக்குமாம்.

ஃ ஃ ஃ

ஒருவித வண்ணாத்திப் பூச்சிகளிருக்கின்றனவாம். அவற்றிற்குப் பசி வந்தால் பத்தும் பறந்துபோம். அவை தங்கள் உறுப்புக்களில் சிலவற்றைத் தாங்களே தின்று விடுகின்றனவாம்.

ஃ ஃ ஃ

யூகோஸ்லாவியாவில் பெண்கள் விற்கப்படுகிறார்கள். பெண்கள் நிறுக்கப்பட்டு சராசரி ஒரு பவுண்டு நிறைக்கு இரண்டு முதல் மூன்று பென்ஸ்வரை விலை கொடுக்கப்படுகிறது. நனறாகப்பாடும் பெண்ணாயும், நட்டியமாடும் பெண்ணாயுமிருந்தால் விலை அதிகம்!

ஃ ஃ ஃ

ஹாலந்துநாட்டு இராணிமார் ஆண் குழந்தைகளைப் பெறுவதேயில்லையாம். சென்ற அரை நூற்றாண்டாக ஹாலந்தைப் பெண்ணரசிகளே ஆண்டு வருகின்றனர். இப்போது ஜூலியானா இளவரசி ஆண்டுவருகிறார்.

ஃ ஃ ஃ

அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் உலகிலேயே அதிக அதிசயமுள்ள மிருக மொன்றிருக்கிறது. அம்மிருகத்தில் பாதி நாய், பாதி பூனை. தலை காது முதலியன நாய் உருவ முடையவை. மற்ற உடம்பெல்லாம் பூனை உருவுடையது. ஆனால் அது பூனைமாதிரி தான் கத்துகிறது. இதிலெல்லாம் பெரிய ஆச்சரியம் இது போட்ட நான்கு குட்டிகளும் பூனைக் குட்டிகளாகத்தானிருக்கின்றன.

# பயிரைத் தாக்கும் பூச்சிகள்.

## தடுக்கும் விதம்.

(M)

பயிரைத்தாக்கும் பூச்சிகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. இலை, தண்டு, முதலியவற்றை கடித்து கிழித்து மென்று தின்பவை.

2. செடிகளில் உள்ள சாரத்தை உறிஞ்சிக் குடித்து அவைகளை வாடச்செய்து உலரும் படி செய்பவை. முதலில் கூறியவற்றில் வெட்டுகிளிகள், வண்டுகள், இலை கடித்தின்னும் புழுக்கள் முதலியவற்றையும் பின்னால் கூறப்பட்டவைகளில் நாவாய்ப் பூச்சிகள், பேன் அல்லது அசுகுணி முதலியவற்றையும் சேர்க்கலாம்.

உருஞ்சும் பூச்சிகள்:—Plant lice [பேன்கள்] சாதாரணமாய் இதை தமிழில் பேன் அல்லது அசுகுணி என்றும் தெலுங்கில் பங்கா என்றும் சொல்லுவார்கள். இவை அநேகமாய் எல்லா செடிகளையும் பிடிக்கின்றன. மிகவும் சிறியன, மிருதுவான தேகமுடையவை. செடிகளின் குருத்து கொழுந்து, மொட்டு புஷ்பம் முதலிய மிருதுவான பாகங்களிலிருந்து செடிகளின் வளர்ச்சிக்கு வேண்டிய சாற்றை இப்பேன்கள் உருஞ்சி விடுகின்றன. நூற்றுக்கணக்கான பூச்சிகள் செடிகளைப் பிடிப்பதால் செடியின் துளிர்களும் மொட்டுகளும் வாடுகின்றன. இலைகள் சுருட்டை ஆகின்றன. குருத்துக்களின் வளர்ச்சி தடுக்கப்படுகின்றன. பிடிக்கப்பட்ட பாகங்கள் வர வர உலர்ந்து வாடி விடுகின்றன, சாதாரணமாய் இப்பேன்கள் [அசுகுணி] ஆயிரக்கணக்காக இளங்கொடிகளிலும், துளிர்களிலும், பூக்களிலும் மொய்த்துக்கொண்டிருப்பதை நாம் எப்பொழுதும் அவரைச் செடிகளில் பார்க்கலாம். இதைத்தவிர பருத்தி, புகையிலை, சத்திரி, காடேஜ், முள்ளங்கி, அகத்தி, ரோஜா, மா,

ஆரஞ்சி முதலிய செடிகளும் இப்பேன்களால் பீடிக்கப்படுகின்றன.

நாவாய் பூச்சிகள் :— இவை அசுகுணியைப்போலவே செடிகளைத் துன்புறச் செய்கின்றன. ஆனால் பார்வைக்கு அவற்றைப்போலில்லை. இவை மிருதுவான தேகமுடையவை, இவற்றின் மேல் வெண்மை நிறமுள்ள தூளிதம் படிந்திருக்கும்; சிலவற்றில் இத்தூளிதம் அதிகமாயும் சிலவற்றில் குறைந்துமிருக்கும். இன்னும் சிலவற்றில் தேகங்களின் மேல் நீண்ட கோடுகள் போல் இருக்கும். நாவாய் பூச்சி என்ற பெயர் இக்காரணத்தைக்கொண்டே அவைகளுக்கு ஏற்பட்டது. இதை சாதாரணமாய் நாம் குரோடன் செடிகளில் பார்க்கலாம். இவற்றில் பல வகைகள் உண்டு. இவை பலவகை செடிகளை தாக்குகின்றன. அவற்றில் பாருத்தி, கத்திரி, மா, கரும்பு, தக்காளி, முதலியவை யாவருக்கும் தெரிந்த செடிகள்.

ஓடுபோல் ஒட்டி இருக்கும் நாவாய் பூச்சிகள் :—இவை முன் கூறப்பட்டவைகளைப் போலவே செடிகளுக்கு கெடுதல் பண்ணுகின்றன. ஆனால் பார்வைக்கு உயிரற்ற ஜந்துக்களைப் போல் இருக்கும். நன்றாய் வளர்ந்தபின் இவைகளில் அநேகம் செடிகளோடு செடியாய் ஒட்டிக்கொண்டிருக்கும். பார்வைக்கு செடிகளின்மேல் உள்ள மேல் ஓடுகளைப்போல் இருக்கும். அவை குருத்துகள், கிளைகள், மற்ற எல்லா மிருதுவான பாகங்கள் முதலியவற்றின்மேல் மொய்த்துக்கொண்டிருக்கும். பழவர்க்க மரங்களும், காபி, தேயிலை, ஆரஞ்சு முதலிய மாவர்க்கங்களும் இவற்றால் பீடிக்கப்படுகின்றன. இவைகளுக்கு முக்கிய உதாரணம் மலைப்பிரதேசங்களில் உள்ள காபி தோட்டங்களில் காபி செடிகளை அழிக்கும் பச்சை, சிகப்பு, நாவாய் பூச்சிகளே. இவற்றை நாம் சாதாரணமாய் குரோடன்ஸ் செடிகளிலும், கொய்யா, நாரத்தை, வேம்பு, கருவை, (கருவேல்) மா, முதலிய மரங்களில் பார்க்கலாம்.

கடித்துக் கிழித்து மென்று தின்னும் பூச்சிகள் :—உருஞ்சிக் கொள்ளும் பூச்சிகளைப்போல் இவை அவ்வளவு அதிகம் கெடுதல் செய்வதில்லை. இவற்றில் முக்கியமாய் :—

1 இலைகள் தின்னும் வண்டுகள் :—இவற்றில், இரவில் ரோஜா முதலிய செடிகளை அழிக்கும் (Cock chafer) காக் சேபர் என்று சொல்லப்பட்ட வண்டுகளும் பூசனி வண்டுகளும்

காபேஜ், முள்ளங்கி முதலிட வற்றில் இருக்கும் சிறு வண்டுகளும் சேர்ந்தவை. இவ்வினத்தில் சேர்ந்த சில வண்டுகளின் சிறு பூச்சிகள் பல வகை செடிகளின் வேர்களையும், தண்டுகள் குருத்துகள், முதலிய வற்றையும் பிடிக்கின்றன.

2. புழுக்கல்.—புழுக்களில் அநேக வகை யுண்டு. மயிரால் மூடப்பட்டவை, முள்போன்ற மயிர் உள்ளவை, வழவழப் புள்ளவை, கொம்புகள் உடையவை, வளைந்து உள்ளவை முதலியன. இவை களின் நிறம் பல வர்ணங்கள் அடங்கியவை. அவற்றின் படிக்க வழக்கங்களும் மாறு பட்டு உள்ளன. இவை களில் சில இலை களையும், மொட்டு களையும் தின்னும். சில பூமி மட்டத்திற்கு சரியாய் செடி களை வெட்டி விடும். சில பழங்களையும், குருத்துக்களையும் துளைக்கும். இவ்வகுப்பில் பயிர்களுக்கு கெடுதல் செய்பவை புழுக்களே அன்றி பட்டான்கள் அல்ல.

3. வெட்டுக்கிளிகளும் இலையை வெட்டும் தேனீ இனத்தைச் சேர்ந்த ஈக்களும்—வெட்டுக் கிளிகள் சாதாரணமாய் சிறு செடிகளையே தாக்கும். சில ஈக்கள் (தேனீயல்ல) ரோஜா முதலிய செடிகளின் இலைகளை வெட்டி தங்கள் கூண்டுகளுக்கு எடுத்துப்போம்.

தடுக்கும் முறைகள்:—தடுக்கு முறையில், சிகிச்சையைக் காட்டிலும் பூச்சிகள் வருமுன் தடுப்பதே சுலத்துடன் சுலபம். பயிரிடும் ஜயத்துக்கள் தாங்கள் பயிரிடும் பயிர்களை தினந்தோறும் கவனத்துடன் பார்த்து வரவேண்டும். தங்கள் சுய அனுபவத்தைக் கொண்டு பயிர்களுக்கு எக்காலத்தில் பூச்சிகள் வரும் என்பதை முன் கூட்டியே தெரிந்து கொள்ளவேண்டும். உடனே பயிர்கள் நாசமடையாமல் இருக்க, பூச்சிகளை தடுக்கும் முறையை கையாள வேண்டும். இப்பூச்சிகளை தடுக்கும் முறைகளில் 1. பூச்சிகள் விழ ஆரம்பிக்கும் போதே அவற்றை பொறுக்குதல். 2. வலை, பைகளால் பிடித்தல். 3. நிலத்தைக் கொத்தல். 4. செடிகளை கத்தரித்தல் முதலியவற்றை கையாள்வதால் செலவில்லாமல் பூச்சிகளை தடுத்துவிடலாம். மற்ற சாதனங்களைகையாளமுடியாத காலங்களிலேயே மருந்து பிரயோகிக்கும் முறைகளை அனுஷ்டிக்க வேண்டும். மருந்தை உபயோகிக்கும்படி நேரிடும் காலத்திலேயும் அம்முறையை சீக்கிரத்தில் பிரயோகிப்பதால் மருந்து செலவும்

ஆள் செலவையும் மிகவும் குறைக்கலாம். தடுக்கு முறையை சரிவர அனுஷ்டிக்க வேண்டுமானால் பூச்சிகளின் ஜீவிய சரித்திரம் தெரிந்திருத்தல் மிகவும் அவசியமென ஏற்படும்.

அசுகுணி, நாவாய்பூச்சி, மிருது தன்மையுள்ள சிறுபூச்சிகளாதலால் இவைகளுக்கு ஒட்டுந்தன்மையுள்ள மருந்து உபயோகிக்க வேண்டும். இவை பூச்சிகளின் தேகத்தில் பட்ட மாத்திரத்தில் அவற்றிற்கு மூச்சுத்திணறலோ அல்லது பொறுக்கமுடியாத அரிப்போ ஏற்படுத்தி அவற்றைக் கொல்லுகின்றன.

ஒரு ராத்தல் சோப்பை 5-அல்லது 6-காலன் ஜலத்தில் கரைத்து அசுகுணி முதலிய மெல்லிய சரீரமுடைய பூச்சிகளுக்கு அடிக்கலாம். ஆனால் காஸ்டிக்சோடாவால் செய்யப்பட்ட சோப்பைவிட சாம்பல் காரம் கலந்த சோப்பே நல்லது. ஏனெனில் காஸ்டிக் சோடாவால் செய்யும் சோப்பைவிட சாம்பல் காரம் கலந்த சோப்பு ஜலத்துடன் நன்றாய்க்கலந்து பூச்சிகளைத் தாக்கும்.

மற்றொரு முறை:—அரை ராத்தல் சோப்பை மெல்லியதாக சீவி ஒரு காலன் ஜலத்தில் கொதிக்கவைக்கவும். பிறகு அடுப்பைத் தணித்து 2 காலன் கிரோசின் எண்ணெயை அத்துடன் சேர்க்கவும். எண்ணெய் சோப்பு ஜலத்தில் நன்றாக கலந்து ஒன்று சேர்ந்து வெண்ணெய் போல் ஆகும் வரை நன்றாக கலக்கிக்கொண்டே இருக்கவும். காற்றடிக்கும் பம்பைக் கொண்டு காற்றடித்தால் சோப்பு ஜலத்துடன் எண்ணெய் நன்றாய் கலந்துவிடும். இந்த மருந்து சரிவர செய்யப்பட்டிருந்தால் அதிக நாள் வேண்டுமானாலும் வைத்துக்கொண்டிருக்கலாம். இத்துடன் 15 முதல் 20 பங்குவரை ஜலத்தை சேர்த்து உபயோகிக்கலாம். இதை பூச்சிகளுக்கும், செடிகளுக்கும் தகுந்தாற்போல் அதிகமாகவோ, குறைச்சலாகவோ ஜலத்தைச் சேர்த்து உபயோகிக்கலாம். சுத்த ஜலமில்லாமல் உவர் சம்பந்தப்பட்டிருக்கும் பக்ஷத்தில் அதிக சோப்பு வேண்டியிருக்கும். மருந்து துவானங்கள் செடிகளின்மேல் நன்றாய் ஒட்ட ஒன்று அல்லது இரண்டு அவுன்ஸ் வச்சிரத்தை தெளிக்கு முன் மருந்துடன் சேர்த்துக்கொள்ளுதல் நலம்.

மேலும் புகையிலைக் கசாயமும் உபயோகிக்கலாம். ஒரு ராத்தல் புகையிலை (அடிக்கட்டை, காம்பு முதலியவை) ஒரு காலன் ஜலத்தில் அரை மணி நேரம் கொதிக்கவைக்கவும். அல்லது ஒரு நாள் முழுவதும் பச்சை ஜலத்தில் ஊறவைக்கவும்.

அத்துடன் 4 அவுன்ஸ் சோப்பை சேர்க்கவும். சோப்பு சேர்ந்த புகையிலை கஷாயம் நன்றாய் ஆறினதும் அத்துடன் 6 அல்லது 7 மடங்கு ஜலத்துடன் கலந்து பூச்சி பிடித்த செடிகளின்மேல் அடிக்கலாம். அசுதுணி, நாவாய் பூச்சிகளுக்கு இது சிறந்த ஔஷதம். கூரை முதலியவற்றிற்கும் எந்தச்செடிகளின் இலைகளை சாப்பிட உபயோகப்படுத்துகிறோமோ அவைகளுக்கும் இதை உபயோகப்படுத்தலாம்.

அசுக்கடி பீடிக்கும் புகையிலைப் பேனுக்கு இது மிகவும் சிறந்த ஔஷதம். புகையிலை கஷாயத்துடன் சோப்பை கலப்பதால், மருந்தைச் செடிகளின் மேல் நன்றாய்ப் பாவச் செய்வதுடன் மருந்தின் குணத்தையும் அதிகப்படுத்துகிறது. செடிகளின் சத்தை உருஞ்சும் பூச்சிகளுக்கு புகையிலையிலிருந்து செய்யப்பட்ட மருந்து மிகவும் சிலாக்கியமானது. காய்ந்த புகையிலைத் தூளுடன் சுண்ணாம்புத்தூள் அல்லது சாக்குத்தூள் இவற்றைக் கலந்து உயரமாய் வளராத செடிகளைத் தாக்கும் பூச்சிகளைக் கொள்ள உபயோகிக்கலாம்.

மேற்சொன்ன மருந்துகளை கடித்துத் தின்னும் பூச்சிகளுக்கும் உபயோகிக்கலாம். ஆனால் காலம் சரியாய் இல்லாத சமயங்களில் மருந்தை தெளிக்கக்கூடாது. அதாவது முக்கியமாய் அதிக மழைபெய்யும் காலங்களிலும் அதிகக் காற்று அடிக்கும் காலங்களிலும் இவற்றை உபயோகிக்கக்கூடாது. தூளாய் இருக்கும் மருந்தை செடிகளின்மேல் தூவுவதற்கு காற்றில்லாத விடியற்காலமே சிறந்தது. அப்பொழுது செடிகளின் மேல் பனி படர்ந்திருப்பதால் தூவப்பட்ட மருந்து அவைகளின் மேல் நன்றாய் ஒட்டிக்கொள்ளும். இயந்திரங்களின் உதவியைக்கொண்டு மருந்தடிப்பதே மிகவும் நல்லது.

---

## எறும்பு கடித்து இறந்தான்.

பெல்கிராடுக்கருகில் ஐவான் என்ற ஒரு மனிதன் ஒரு மரத்தின் மேல் ஏறினான்; மரத்திலிருந்து கால் வழுகிக் கீழே ஒரு பெரிய எறும்புப் புற்றின் மேல் விழுந்தான். இரண்டு காலும் ஒடிந்தன. அவனால் நடக்கமுடியவில்லை. இரண்டு நாட் கழித்துப் பார்த்தால் அவன் அவ்விடத்தில் மாண்டு கிடந்தான். எறும்பு கடித்து மாண்டதாக வைத்திய பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

# பிரான்சின் பாதாளக்கோட்டை

ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு தேசமும் எல்லைக்கோட்டைகளை பலப்படுத்தியுள்ளது.

எஃகு சுவரின் மீது 'காங்கிரீட்' மதில்கள் எழுப்பி, சத்ருக்கள் திடீரென படையெடுக்க முடியாதபடி செய்திருக்கின்றன. எல்லா தேச எல்லைக்கோட்டைகளை விட பிரஞ்சு மாகினாட் அரண்களே மிகப் பலமானவை என்று "ஸண்டே எக்ஸ்பிரஸ்" எழுதுகிறது.

இக்கோட்டைகள் பூமிக்கடியில் கண்ணுக்குத் தெரியாமல் பாதாளத்திலுள்ளன. புதிதாக வருபவர் சந்தேகிக்கக் கூடிய அடையாளங்கள் அங்கு ஒன்று கிடையாது. ஆனால் யுத்தம் வந்தால் எல்லைப்புறமெங்கும் பீரங்கி ஆர்ப்பாட்டம் கிளம்பி அக்னி மயமாகி, கிட்ட நெருங்கும் சத்ருக்களை துவம்சம் செய்துவிடும்.

பூமிக்கடியிலுள்ள கோட்டைகளிலிருந்து வெளியே பீரங்கிகள் மின்சார விசையால் திடீரெனக் கிளம்பி சத்ருக்கள் மீது சுடும்.

பாதாளக் கோட்டையிலுள்ள சிப்பாய்களை 40 அங்குல கனமுள்ள பலமான 'காங்கிரீட்' மதில்கள் சத்ருவின் வெடி குண்டிலிருந்து பாதுகாக்கின்றன.

வெடிகுண்டுகள் அக்கோட்டைகளைத்தகர்க்க முடியாது. விஷப்புகையும் அவைகளுக்குள் நுழைய முடியாது. உள்ளே காற்றை அதிகமாக அடைத்துள்ளதால் வெளியிலுள்ள எந்த வாயுவும் உள்ளே பிரவேசிக்க முடியாது.

எல்லைக் கோட்டைகளின் சுவர்களெங்கும் வெளியார் கண்ணுக்குப் படாமல் பல கண்கள் இராப் பகலாக காவல் காத்து வருகின்றன.

இரவில் கண்ணுக்குப் புலப்படாத சிகப்பு மின்சார கிரணம் அப்பிரதேசமனைத்தும் பரவியிருக்கும். யாராவது மீறி பிரவேசித்தால் மின்சார ஆபத்து மணி அடிக்கும். உடனே கோட்டையிலுள்ளோர் அனைவரும் உஷாராகி விடுவர்.

பகல் நேரத்தில் ஒரு குருவி கூட காவலர் கண்ணுக்குப் படாமல் எல்லைக் கோட்டையைத் தாண்டி பிரவேசிக்க முடியாது. காவற் கூட்டம், தூரதிருஷ்டிக் கண்ணாடி, மின்

# வைத்தியக் குறிப்புகள்

(காலஞ்சென்ற டாக்டர் மதார் சாயபு)

——(M)——

## II

நல்லெண்ணெய் படி கால், பனங்கோரவை பழச்சாறு படி கால், மிளகு, கருஞ்சீரகம், சித்தரத்தை, சாம்பிராணி, வகைக்கு விராகனிடை 1 பொடித்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி தலை முழுகிவர பீனிசம் தீரும். செம்பட்டை மயிர்கருமையாகும்.

கோரைக் கிழங்கை அரைத்து கொட்டைப் பாக்களவு பாலிற்கொள்ள, திரேகத்திலுள்ள கற்றாளை நாற்றம், பித்தத் தாலுண்டாகும் வீக்கம், சத்திசுரம், நாவரட்சி, தாப சோபம் நீங்கும்.

ஷடி கிழங்கு, மல்லி, பேய்ப்புடல், சுக்கு சிற்றரத்தை ஓர் அளவாய்ச் சிதைத்துக் கசாயஞ் செய்து சாப்பிட பித்தசுரம் நீங்கும்.

பழுபாகல் மூலத்தை அரைத்து, கொட்டைப் பாக்களவு பாலிற் கொள்ள பல விஷங்கள், குஷ்டம், தழுதனை, தொழு

---

சார பொறிகள், ஆபத்து மணி முதலியவை எப்போதும் தயார்.

இப்பாதாளக் கோட்டைகளுக்கு அடுத்தபடியாக 2வது பாதுகாப்புக் கோட்டைகளுமுள்ளன. முதல் கோட்டைகளை சத்துருக்கள் பிடித்து விட்டால் அவர்களை அங்கே அடைத்துப் பூட்டிவிட 2வது வரிசை கோட்டைகளில் விசைகள் உள்ளன. 20 மைலுக்கு அப்பாலுள்ள ஒரு மின்சார பொத்தானை அழுக்கினால் முதல் கோட்டையில் அடைபட்டவர்கள் எல்லாம வெடியில் சிக்கி தூள் தூளாகி விடுவர். இது தான் எவரும் தாண்டிச் செல்ல முடியாத பிரஞ்சு மாகினாட் அரண்!

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தலை, கிருமி நீங்கும். அந்தக் கிழங்கை நாள்பட பத்தியமாய் சாப்பிட்டு வந்தால் தேகம் பலமுண்டாகும்.

தலைச்சுருடி என்ற மூலத்தை முன் சொன்ன அளவாய்ப் பாலிற் கலந்து கொள்ள அரவுகடி, விஷம், சில்லரை விஷங்கள் விஷ கரப்பான், குஷ்டம், சூலை, சொறி சிரங்கு தீரும். தேக பல முண்டாகும். விஷம் அமுதமாகும்.

திசைகருடன் என்ற கட்டுக்கொடி மூலத்தைப் பாலிற் கொள்ள விஷ குஷ்டம் தீரும். விந்து கட்டும், உடல் இறுகும், பேதி கட்டும், ஷை இலை தண்ணீரைக் கட்டும்; நீரழிவைப் போக்கும்.

மலதாங்கி என்ற மூலத்தைப் பாலிற் கொள்ள விந்துகட்டும் குஷ்டம், வாயு, கடிவிஷம், மலச்சிக்கல், நீங்கும். ஷை இலை தண்ணீரைக் கட்டும், அதிக மூத்திரத்தைச் சுருக்கும். இந்த இலை மேற்படி கட்டுக்கொடி இலை ஆவரைக் கொழுந்து இம்மூன்றையும் அரைத்து கொட்டைப் பாக்களவாய்ச் சாப்பிட்டுவர நீரழிவு, பெருநீராய் அடிக்கடி இறங்குவதைச் சுருக்கும். ஷை இலையைத் தண்ணீரில் ஊற வைத்து அந்தத் தண்ணீரைச் சாப்பிட்டுவர அதிகதாகம் தீரும்.

நாய்க்கொட்டான் மூலத்தைப் பாலிற் கொள்ள வண்டு கடி, சிலந்திப் பூச்சிகடி, மற்ற சில்லறை விஷ செந்துக்களின் கடி, விஷம், பெரு விஷகடி, கிரந்தி, பலவகைக் கரப்பன், வங்கு சொறி, கடுங் குஷ்டம், புண் புரை, வீக்கம் தீரும்.

பிராய் மூலத்தைப் பாலிற் கொள்ள பதி னெட்டு வகை வண்டுகடி, வண்டு குஷ்டம், கருங் குஷ்டம், விரியன் கடி விஷத் தாலுண்டாகும் குஷ்டம், நீங்கும். சிராய்ப் போல் உடம்பில் எழும்பும் சாசரப்பு நீங்கும்.

ஷை. மரத்தின் பாலை. பச்சைக் கடலை மாவில் பிரட்டிக் கடலைப் பிரமாணம், உருண்டை செய்து சாப்பிட்டுவர நாதம் கட்டும்.

ஆயில் மூலத்தைப் பாலிற்கொள்ள அண்டவாத சூலை, பலவகைக் கிரந்தி, குஷ்டம், பிளவை, அரையாப்பு, வாதத்தில் எழுந்த நோய்கள், சில்லரை விஷம் நீங்கும்.

புங்குமூலத்தை பாலிற்கொள்ள புண், புரைகள், சூலை, அரையாப்பு, கிரந்தி, பலகரப்பன், குஷ்டம், சில்விஷம் தீரும்.

வெள்ளெருக்கின் மூலத்தைப் பாலிற்கொள்ள கிரந்தி, குஷ்டம் விஷங்கள், வண்டுகடி, செய்யான்கடி, அறுபுள்ளி வண்டுகடி, மரவட்டைகடி, குறைநோய் தீரும்.

வேலிப்பருத்தி மூலத்தைப் பாலிற்கொள்ள, கடிவிஷம், கரப்பன், வெட்டை, பலவகைக் கிரந்தி, சூலை, மருந்தீடு, கை கால், பிடிப்பு வாயு தீரும்.

வெள்ளருகு சமூலத்தைப் பாலிற்கொள்ள சில்லறை விஷம், சிரங்கு, சொறி குஷ்டம், கிரந்தி, வெட்டை, வெடிசூலை, காமாலை, விஷகரப்பன், வீக்கம் தீரும்,

மேற்படி மூலிகை சமூலத்தை தண்ணீரில் வேகவைத்து வெப்பத்துடன் வாயில் விட்டுக் கொப்புளிக்க பல்வலி தீரும்.

சிவன் வேம்பு மூலத்தைப் பாலிற்கொள்ள தீராத சில் விஷம் காலிற்காணும் பிளப்பு, குஷ்டம்,கரப்பன் வகைகள், வாயு தீரும்.

மேற்படி மூலிகை சமூலத்தையும் உலர்த்திச் சூரணஞ் செய்து சர்க்கரைக் கலந்து திரிகடிப்பிரமாணம் மண்டலங்கொள்ள குஷ்டம் பதினெட்டு, பாதத்தில் உண்டாகும் விரிவு, மேல்தடிப்பு, படர்தாமரை, அரிப்பு, தேகத்தில் முள்ளுகொண்டு குத்துவது குத்துதல், திமிர், தலை நோய் தீரும்.

அறுபது வருடம் சென்ற வேம்பின் வேர்ப்பட்டை, கொழுந்து பூ, பிஞ்சு, இலைகள் ஓர் நிறையாய் உலர்த்தி, இடித்து திரிகடிப் பிரமாணம் ஒரு மண்டலம் ஆவின்பால், நெய், தேனில் கொள்ள சகல நோய்களும் தீரும். தேகம் இறுகும். நரைதிரை மாறும்.

மேற்படி தூளில் வாழைப்பழத்தைப் புதைத்து நாற்பதாம் நாள் எடுக்க காயாயிருக்கும். அதைத் தின்ன தேகம் கற்றூணாகும். தேகம் ஒருபோதும் தளராது.

செங்கத்தாரி [கருஞ்சூரை, செஞ்சூரை] மூலத்தைப் பாலிற் கொள்ள கரப்பான், கிரந்தி, செவ்வாய்ப்புக்கட்டி, செங்கரப்பான், கொள்ளிக் கரப்பான் முதலியன கரப்பான்களும், பல விஷங் களும் தீரும். ஷை பட்டையை அரைத்து உடம்பிற் பூச ஷை வியாதிகள் தீரும்.

தூதுவளை இலையைச் சமைத்துத் தின்ன பசி உண்டா கும். ஷை பூவை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் தாதுபுஷ்டி உண்டாகும் ஷை காயை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் வாத

பித்த சிலேத்மம் நீங்கும். ஷை வேரை வேற்றிலை பாக்குடன் தின்று வர திரிதோஷம் நீங்கும். தூதுவளை சமூலம், பேய்ப்புடல், காப்பன், மிளகு சீரகம், ஜாதிக்காய், கிராம்பு, வால் மிளகு, இவைகளைச் சூரணித்து பிட்டவித்து நெல்லிக் குச்சியால், கிண்டி, ஆற்றி சர்க்கரை கலந்து சாப்பிட காந்தல், வீக்கம், சோகை, தீரும்.

சித்தா மணக் கிலையின் சாறு, வேப்பெண்ணை, சமன் கலந்து. பதமாய்க் காய்ச்சி, வடித்து, ஒரு மண்டலம், புளி, தள்ளி, பத்தியமாய்ச் சாப்பிட்டால் கருங்குஷ்டம், வெண்குஷ்டம், சொரி குஷ்டம், கிரந்தி, தழுதணை, குறை நோய், பெரு வியாதி, திமிர், கிரந்திப்புண், தீரும் ஆமணக் கெண்ணெய் பல அவுஷதங் களுக்கு ஆவது மின்றி, உடலிலுள்ள வெப்பையும், மூலச் சூடை யும், நீக்கி உடலை வளர்க்கும். ஷை எண்ணெய், கற்றாளைச் சோற்றின் நீர் ஈருள்ளிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு வகைக்குப் படி மாகாணி ஒன்றாய்க் கலந்து அதில் ஒரு விராகனிடை வெந் தயத்தைப் பொடித்துப்போட்டு சாப்பிட விரோசனமாகும் மலக் கட்டுத் தீரும்.

மேற்படி எண்ணெயில் கதலி, வாழைப்பழம், பேரீத்தம் பழம், மூந்திரிப் பழம், ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, குங்குமப்பூ, கோரோசனை, கற்கண்டு, இவைகளைப் பொடித்துப் போட்டு இரவில் வைத்துக் கொண்டு குழந்தைகளுக்குக் கொடுத்து வர கணை, பிணி, மாந்தம், காப்பன், தீரும். மேனி பருக்கும், பளபளக்கும்.

மூக்கரைச் சாரணை வேரை ஆவின்பாலிற் கொள்ள ஒரு மண்டலத்தில் நரைதிரை மாறும், உடல் இறுகும். பகலில் நட் சத்திரம் கண்ணுக்குத் தோன்றும், குன்மம் எட்டுந் தீரும்.

நானோ நடுக்கடலில் செல்ல விரும்புகிறேன். காற்றிலும் திரையிலும் அகப்பட்டு ஒரு கை பார்க்க நான் எண்ணுகி றேன். வைதீக கப்பற்றுறையில் கிடந்து அழிவதை விட காற்றிலும் அலையிலும் அகப்பட்டு உயிர் விடுவதே மேலெ ன்று எனக்குத் தோன்றுகிறது.

இங்கர்சால்

# மதமும் மன்னனும்

ஜீன் மெஸ்லியர்

தேச மக்களுக்குப் பொதுவாக ஏற்படும் துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் போர்களுக்கும் பேராசையுடைய அரசர்களே காரணம். போர் வெறிகொண்ட நாட்டிலே விவசாயம் சீரழிகிறது; கைத்தொழில் நாசமாகிறது; பஞ்சமும் தொத்து வியாதிகளும் பரவுகின்றன; வறுமை வளர்கிறது. ஜனங்களிடம் கடவுளுக்குக் கோபமுமில்லை; பிரீதியுமில்லை. கடவுள் கல்நெஞ்சனுமல்ல; மக்களை ஆளும் அரசர்களே கல்நெஞ்சர்கள். கடவுள் ஒருவனுக்கே தாம் ஜவாப்தாரி என்ற நம்பிக்கையை பாதிரிமார் உண்டுபண்ணி வளர்த்து வருவதினால் அரசர்கள் கூசாமல் குடிகளுக்கு இன்னல் விளைவிக்கிறார்கள். பொதுஜன க்ஷேமத்துக்காக அவர்கள் எதுவும் செய்வதுமில்லை. ஓ அரசர்களே! நீங்கள் அநியாயம் செய்யும்போது கடவுளுக்குத் தீமை செய்யவில்லை. உண்மையில் உங்கள் குடிகளுக்கே தீமை செய்கிறீர்கள்.

மதவெறிகொண்ட கொடுங்கோலர்களே உலகத்தில் ஏராளமாக இருக்கிறார்கள். மக்கள் க்ஷேமத்தில் கவனமும், நீதியும், அறிவும் உடைய அரசர்கள் வெகு அபூர்வமாகவே இருக்கிறார்கள். ஒரு அரசன் மிகவும் பக்தியுடையவனாயிருக்கலாம்; மதச்சடங்குகளை ஒழுங்காகச் செய்கிறவனாயிருக்கலாம்; பாதிரிமாரிடம் வணக்கமுள்ளவனாயிருக்கலாம்; பாதிரிமாருக்கு தாராளமாகப் பணங்கொடுக்கிறவனாயிருக்கலாம். ஆனால் அப்பேர்ப்பட்ட அரசனும் பொதுவாகத் துர்க்குணமுடையவனாயும் நிர்வாகத்திறமையில்லாதவனாயும் அநீதி செய்பவனாயும் இருக்கிறான். மக்களை அடிமைப்படுத்தி அடக்கியாளுவதற்கு ஒரு கருவியாகவே மதத்தை அரசர்கள் கையாண்டு வருகிறார்கள். மக்களைக் கொள்ளையடித்துக் கொடுமைப்படுத்தி அந்நிய நாடுகளுடன் போர்தொடுத்து லக்ஷக்கணக்கானவர்களைக் கொன்று அநேக நாடுகளைப் பாழாக்கி கொடுமையே உருவாகத் திரண்ட கொடுங்கோலனும் ஒரு பாதிரி காலில் விழுந்து பாவ சங்கீர்த்

தனம் செய்துகொண்டால் அவனுடைய பாவங்கள் எல்லாம் நீங்கி சுவர்க்கபதி பெறுவான் என்று மதங்கள் கூறினால் எந்த அரசன் தான் நீதிமானாகவும் கருணையுடையவனாயுமிருப்பான்?

## மதப்பற்றுடைய மன்னன் நாட்டுக்கு ஒரு பீடையே.

மதபக்தியுடைய அரசர்கள் பொதுவாக நாட்டுக்கு ஆபத்தானவர்களாகவே இருந்து வருகிறார்கள்; விசால புத்தியில்லாதவர்கள் எதையும் சுலுவில் நம்பக்கூடியவர்களாகவே இருப்பார்கள். தெய்வபக்தியுடையவன் தேச நிருவாக விஷயத்தில் அதிக கவனம் செலுத்தமாட்டான். பாதிரிமாருக்கு அடிமைப்பட்டிருக்கும் அரசன் எப்பொழுதும் பாதிரிமார் கட்டளைப்படியே நடப்பான். பாதிரிமார் மூடச் செயல்களையெல்லாம் ஆதரிப்பான்; பாதிரிமார் கட்டளைகளே அவனுக்கு முக்கியம். அவர்கள் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பான். தெய்வ பக்தியுடைய அரசர்கள் மக்கள் மோக்ஷ சாம்ராஜ்யம் அடையும் பொருட்டே தாம் அரசாள்வதாக நம்பி பாதிரிமார் கட்டளைகளை மீறுகிறவர்களைத் தண்டிப்பதும் கொடுமைப்படுத்துவதும் தமது முக்கிய கடமையென்று எண்ணுகிறார்கள். ஆகவே மதவெறிகொண்ட அரசனே ஒரு தேசத்துக்கு மிகவும் பெரிய சத்துரு. பாதிரிமார் வார்த்தையால் அந்நாட்டில் புரட்சியை உண்டுபண்ணிவிடுவார்கள். பட்டத்துக்குரிய இளவரசர்களை தேச நிருவாகத்துக்குப் பழக்கும் பொறுப்பு எல்லா நாடுகளிலும் பாதிரிமாரிடமே இருந்து வருகிறது. பாதிரிமார் மூலம் இளவரசர்கள் எத்தகைய அறிவைப் பெறக்கூடும்? குருட்டு நம்பிக்கைகளுக்கு இருப்பிடமான பாதிரிமார் மத குருட்டு நம்பிக்கைகளையே இளவரசர்களுக்கும் போதனை செய்வார்கள். பாதிரிமாரையும் மதச் சடங்குகளையும் ஆதரிப்பதே மன்னர்களின் முதற்கடமையெனக் கற்பிப்பார்கள். தமது துர்ப்போதனைகளால் இளவரசனை மதவெறியனாக்குவார்கள்.

## கொடுங்கோன்மை மதங்களைக் காக்கும் கற்கோட்டை.

எல்லா தேசங்களிலும் எல்லாக் காலத்தும் பாதிரிமார் கொடுங்கோலாட்சிக்கு நண்பர்களாயும் சுதந்திரத்துக்கு விரோதிகளாயுமே இருந்து வந்திருக்கிறார்கள். பகுத்தறிவில்லாத அடிமைகளே பாதிரிமாருக்கு அதிகம் தேவை. யதேச்சாதிகார நாடுகளில் அரசர்களைத் தம் வசப்படுத்திக்கொள்வதே பாதிரிமார் முக்கியமாக முயல்கிறார்கள். அரசன் தம்மிஷ்டப்படி நடக்கக்கூடிய

வனாயிருந்தால்தான் மக்களைத் தம்மிஷ்டப்படி ஆட்டிவைக்க முடியுமென்று பாதிரிமாருக்குத் தெரியும். மக்களுக்கு மோக்ஷ உலக வழி காட்டவேண்டிய பாதிரிமார் அடிமைத்தனத்துக்கு வழி காட்டியாகவே இருந்து வருகிறார்கள்.

மதங்கள் அரசர்களுக்குப் பெரிய பெரிய பட்டங்களை வழங்கியிருப்பதினால் பாதிரிமார் உதவியினால் மக்களை அடிமைப்படுத்தி வைக்கலாமென்றும் அரசர்கள் நம்பியிருக்கிறார்கள். மதமும் பாதிரியும் தமக்கு அரண் என அரசன் நம்பியிருந்தாலும் அவனது கர்ம பலனை அவன் அநுபவித்துத்தான் ஆகவேண்டும். பொதுஜன அபிப்பிராயம் மிகவும் பொல்லாதது; சக்தி வாய்ந்தது; மேலும் கொடுங்கோன்மை தமக்கு இலாபகரமாயிருக்குமானாற்றான் பாதிரிமார் கொடுங்கோலனை ஆதரிப்பார்கள். கொடுங்கோன்மையினால் மதத்துக்கும் தமக்கும் நன்மையேற்படவில்லையென்று கண்டால் உடனே மன்னனுக்கு எதிரிடையாகப் பிரசாரம் செய்யப் பாதிரிமார் தொடங்கி விடுவார்கள். தம்மிஷ்டப்படி நடவாத அரசர்களைப் பாதிரிமார் ஆதரிக்கவே மாட்டார்கள். பாதிரிமார் ஆதரவு அரசர்களுக்குத் தேவையாயிருந்தால் அவர்களுடைய ஆட்சி பகுத்தறிவுக்கும் நீதிக்கும் முரணானதென்றே ஏற்படுகிறது. யதேச்சாதிகாரத்தினால் நன்மையுண்டாகுமா? குடிமக்களின் அன்பே அரசர்களுக்கு மெய்யான பாதுகாப்பு. யதேச்சாதிகாரிகள் அந்த மெய்யான பாதுகாப்பை கட்டாயம் இழந்து விடுவார்கள். யதேச்சாதிகாரிகள் தமக்குத்தாமே தீமை செய்துகொள்ளும் பைத்தியக்காரர்களே. முகஸ்துதி கூறுவோரால் அரசர்களுக்கு நன்மை உண்டாகாது. அரசர்கள் இதை அறிந்திருப்பார்களாக!

## மன்னர் குற்றங்களுக்கு மதம் ஆதரவு.

பாதிரிமார் முகஸ்துதி கூறி அரசர்களைப் பாழாக்குகிறார்கள்; மன்னர்களோ முகஸ்துதியினால் தம்மைச் சூழ்ந்து இருப்பவர்களைக் கெடுக்கிறார்கள். நீதியோ, நியாயமோ, நற்குணமோ, சட்ட ஞானமோ நிர்வாகத் திறமையோ இல்லாத அரசன் கீழ் வாழும் ஜனங்கள் ஒழுக்கங்கெட்டவர்களாவது ஆச்சரியமல்ல. அப்பேர்ப்பட்ட ஒரு அரசன், உண்மையும் ஒழுக்கமும் அறிவும் உடையவர்கள் தன் பக்கத்தில் இருப்பதை விரும்பவே மாட்டான். தன்னிஷ்டப்படி நடக்கும் பொய்யர்கள், அடிமைகள், முகஸ்துதிக்காரர்கள் முதலியவர்களையே அவன் அதிகமாக விரும்புவான். காலக்கிரமத்தில் ஒழுக்கமின்

லாத அரசன் ஆளும் நாட்டில் எல்லாரும் ஒழுக்கம் கெட்டவராகி விடுவார்கள். மதம் மன்னர்களுக்கு ஒரு தடையாக இருக்க வில்லை; தம்மிஷ்டப்படி காரியங்களை நடத்துவதற்கு மதம் அவர்களுக்குத் துணையாகவே இருந்துவருகிறது. நீ தான் கடவுளென்று ஒரு அரசனிடம் சொல்லிப்பாருங்கள். உடனே தன்னிஷ்டப்படி காரியங்களை நடத்த அவன் ஆரம்பித்து விடுவான். அரசனைக் கண்டு எல்லாரும் பயப்பட்டால் மக்கள் அன்பைப் பெற அவன் விரும்பவே மாட்டான். பிறர் உரிமை களை ஒப்புக்கொள்ள மாட்டான். தனக்கும் குடிகளுக்கும் பந்தமிருப்பதாயும் உணர மாட்டான்; மக்களுக்குத்தான் தான் செய்யவேண்டிய கடமைகள் உண்டென்றும் அறியமாட்டான். நீ கடவுளுக்குத்தான் ஜவாப்தாரி என்று அரசனிடம் கூறினால் தான் எவனுக்கும் கட்டுப்பட்டவனல்ல வென்ற இறுமாப்புடன் அவன் காரியங்கள் நடத்தத் துணிந்து விடுவான்.

## விவேகமுள்ள அரசன் யார்?

தன் சுயநிலைமையை நன்றாக உணர்பவனே விவேகமுள்ள அரசனாவான்; விவேகமுள்ள அரசன் தனக்கும் குடிமக்களுக்கும் சம்பந்தம் உண்டென்பதை அறிவான்; தன் குடிகள் அடிமை களாயும் வறியர்களாயும் இருக்கும்வரை தான் பெரியவனாகவோ வலிமையுடையவனாகவோ, மதிப்புடையவனாகவோ, பொது ஜன அன்புக்குப் பாத்திரனாகவோ இருக்க முடியாதென்று அவன் உணர்ந்துகொள்ளுவான். கடவுளால் கொடுக்கப்பட்ட தாகக் கூறப்படும் பட்டங்களைவிட நீதி, கருணை, பொதுஜன க்ஷேமத்தில் கவலை முதலிய குணங்களினாலேயே தமக்கு அதிக மதிப்பும் அதிகாரமும் கிடைக்குமென்று அறிந்து கொள் வான். மதம் பாதிரிகளுக்குப் பிரயோஜனகரமானதென்றும் ஜன சமூகத்துக்குத் தேவை யில்லையென்றும், மதத்தினால் ஜன சமூகத்துக்குத் தீமையே அதிகமாக உண்டாகிற தென்றும் கண்டு கொள்வான். இவ்வாறு விவேகமுடைய அரசன் குடி களுக்குத் தீமை செய்யவே மாட்டான்; அரசாட்சி செய்து புகழ் பெற வேண்டுமானால் நல்ல சட்டங்கள் இயற்றி நற்குணங் களுடன் வாழ வேண்டுமென்று கடைசியாக உணர்ந்து கொள்வான்.

# பூமி சாஸ்திரிகள் வதை.

சார்லஸ் டி. கோர்ஹாம்.

கிறிஸ்துமதம் தோன்றிய பின்னர்கூட சிலநாள்கள் வரை பூமியின் மேற்பரப்பின் அமைப்பைப்பற்றி அறிய பலர் ஆசைப்பட்டு வந்தனரெனினும் சாதாரணமாக பூலோக ஆராய்ச்சி வெகுநாட்கள் வரை யாதொரு வியப்பையும் உண்டாக்காமலே இருந்துவந்தது. மதமூடக் கொள்கையால் ஆளப்பட்டுவரும் உலகத்திலே புதிதாகத் தோன்றுபவையெல்லாம் அபாயகரமானவையே என்று கருதப்படுதல் வழக்கம். ஹீப்ரு மதநூல்களின் ஆதாரங்களைக்கொண்டு இயற்கைப் பொருட் காட்சிகள் பல விபரீதமாக விளக்கப்பட்டுவந்தன. உதாரணமாக பூமியின் மேற்பரப்பு மேடுபள்ளமாகவும், வளைந்தும் இருப்பதற்குக் காரணம் கடவுள் மக்களது பாபங்களைக்கண்டுகொண்டுள்ள கோபத்தின் அறிகுறி என்று அர்ச் ஜிரோம் என்பவர் கூறினார். இயல்பாகவே அவரும் இன்னும் அவருக்குப்பின் வந்த பலரைப் போன்றே, பூமியில் காணப்படும் எலும்புருவங்கள் எல்லாம் பிரளய காலத்திற்குப்பின் எஞ்சிய உருவங்கள் என எண்ணினார். இன்னும் டாக்டர் பர்னட் என்பவர் ஒருவர் கூறுகிறார் 'அந்த வினோத சம்பவமாகிய பிரளய வெள்ளத்திற்கு முன் உலகத்திலே சமுத்திரம் என்பதே இருந்திருக்க முடியாது. ஏனெனில் அவ்வாறு இருந்திருப்பின் மக்கள் கப்பல் முதலியவற்றைக் கட்டிக்கொண்டு தம்மைக் காப்பாற்றிக் கொண்டிருந்திருக்க முடியும். பூகம்பத்திற்கு இயற்கைக் காரணங்கள் ஏதாயிருப்பினும் அதற்கு ஒழுக்கக் காரணம் மக்களது பாவங்களிடம் கடவுள் கொண்டுள்ள கோபம் என்பதேயாகும்' என்று ஜான் வெஸ்லீ என்பவர் கூறியுள்ளார். ஆதாம் என்பவர்தான் (முதல் மனி

தன்) பிரதானக் குற்றவாளி. ஆனால் ஏனைய இருவரும் ஏவாளும், (முதல் மனுஷியும்) பாம்பும் (பிசாசும்) குற்றவாளிகள்தான். ஏதேன் என்னும் நந்தவனம் ஏற்பட்டதற்கு முன்பே சர்ப்பங்கள் இருந்திருக்கவேண்டும். ஆனால் ஆதாம் என்பவருக்கு அது தெரிந்திருக்காது. பைபிள் நூலைக் கரைகண்ட ஒரு பிரஞ்சு ஆசிரியர் பதினேழாம் நூற்றாண்டில் ஏதேன் நந்தவனத்தில் குடியிருந்த இருவரது உடல் அவயவ அமைப்பைப்பற்றியும் மிகவும் ருசிகரமானதும், விபரீதமானதுமான சில விஷயங்களை மொழிகின்றார். ஆதாம் என்பவர் கம்பீரத் தோற்றத்தோடு 123-அடி 9-அங்குலம் உயர்ந்திருந்தார் எனவும், ஏவாள் என்பவள் 118-அடியும் 10-அங்குலத்திற்கு ஒரு கோடு குறையவும் வளர்ந்திருந்தாள் எனவும் கூறுகின்றார் அவர். இவரைவிட அதிகச் சாமர்த்தியமாய்க் கணக்குப்போட்டு உலகம் சிருஷ்டியான காலத்தைக் கண்டுபிடித்திருக்கிறார் மற்றொருவர். அவரும் பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜில் இருந்த டாக்டர் ஜான்லைட்புட் என்பவர். அப்பெரியார் கடவுளின் ஆக்ஞைக்கிணங்க சூன்யத்திலிருந்து உலகமானது கி. மு. 4004-வது ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் தேதி காலை 9-மணிக்கு உற்பத்தியாயிற்று. என்று கணக்கெடுத்திருக்கின்றார். மற்றொரு பிரஞ்சு ஆசிரியர் ஆதாம் முதலியவர்களுக்கு முன்பே மனிதர்கள் உலகத்தில் இருந்தனர் என்னும் நூதனமான கொள்கையை யமைத்து ஓர் நூலை இயற்றினார். ஆனால் சிறைச்சாலையின் வாசம் அவரைச் சரிபடுத்தவே அவர்தான் செய்தது தவறு என்று ஒப்புக்கொண்டார். பிரளயத்தின் அறிகுறியே பெரும் எலும்புருவங்கள் என்னும் கருத்தானது குறைந்தது மூன்னூறு ஆண்டுகளாவது யாராலும் மறுக்கப் படாமல் ஏற்றுக் கொள்ளப்பட்டேதான் வந்தது. வால்டயர் கூட (ஆனால் அவர் விளையாட்டிற்காகக் கூறியிருக்கலாம்) அவைகள் பிராயாணிகள் எறிந்து விட்டுப்போன மீன்களின் எலும்புகளாயிருக்கலாம் என்று கருதியுள்ளார். அவை யனைத்தும் இறந்துபட்ட பிராணிகளின் எலும்புகள் என்று

ரூகப்படுத்தப் பட்டவரையில் பூகோள சாஸ்திரத்தின் நிலைமை ஆபத்திற்குள்ளாகத்தான் இருந்து வந்தது. விஞ்ஞான சாஸ்திரியின் பாதையானது மிகப் பெரிய பாராங்கற்களால் அடைக்கப்பட்டிருந்த தன்றியும், அதைத் தாண்டிச் செல்பவர்க்குத் தண்டனையும் விதிக்கப்பட்டு வந்தது.

ஒருசில கிறிஸ்துவக் கல்விமான்களே சர். "சார்ல்ஸ் லையல்" என்பவரின் முடிவுகளை ஏற்கலாயினர். பைபிளில் கூறியுள்ளபடி உலகப் பிறப்பிற்கு ஒத்துவாராதபடியால் பல வைதீகக் கிறிஸ்துவர்கள் வசைமொழிகள் பாடி அதை எதிர்த்தும் வந்தார்கள். உண்மையின் சிறு சிறு பாகங்கள் நெடுநாட்களுக்கு முன்னரே சில ஆராய்ச்சியாளருக்குப் புலப்படலாயிற்று; ஆனால் குருக்கள் அவர்களைத் தங்கள் ஆயுதங்களாகிய சித்திரவதை, சிறைக்கூடம், கொலை முதலியவற்றைக்கொண்டு அடக்கிவிட்டனர். ஆனால் இறுதியில் சமயவாதிகள் தாங்கள் அனுபவிக்க வேண்டிய தோல்வியை முற்றிலும் அடைந்தனர். இக்காலத்தில், நமது பூமியின் வயது மிகப் பெரிது என்று யாவரும் நன்கு தெரிந்துகொண்டனர். மற்றும் நமது முதல் மூதாதையர்களாகிய ஆதாமும் ஏவாளும் சிந்தனையுலகத்திலன்றி வேறெங்கணும் இருந்திருக்க முடியாதென்பதை அறிவுடைய எவரும் மறுக்கவே மாட்டார்.

பூலோக சாஸ்திர ஆராய்ச்சிக்குச் சமயவாதிகளால் இருந்துவந்த எதிர்ப்பு அளவுகடந்ததாகும். அதனால் தான் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கூட ஒருவராவது தனது முடிவுகளை வெளிப்படுத்த முன்வரவில்லை. அவ்வாறு வந்தவர்களோவெனின் தமது தைரியத்திற்காகத் தண்டனையுற்றனர். யார்க்கு நகரத்துக் குருவான காபர்ன் என்பவர் மேரி சாமாவில் என்பவரைப் பேர்சொல்லிச் சாடையாய்த் திட்டினார் எனினும் அவரது பரமவிரோதி பிரிட்டிஷ் விஞ்ஞான விருத்திச் சங்கமேயாகும். சமயவாத உலகத்திற்கே விஞ்ஞான நூல்களே பரம விரோதிகள், நஞ்சுபோன்றவை; அதிலும் பூமி சாஸ்திரமோவெனின் பைபிளுக்கு மிக விரோத

மானது. அது தொலைக்கப்பட வேண்டியதொரு மந்திர வித்தையாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறிஸ்து மதத்தின் பிரதானப் பிரிவினருள் சிலர் விஞ்ஞான சாஸ்திர விற்பனராயிருப்பினும், பொதுவாக அம்மக்களிடம் விஞ்ஞான ஆராய்ச்சிகள் விசேஷமாகக் கொண்டாடப்பட்டு வரவில்லை. அத்தகைய அறிஞர்களுள் புரொபசர் "அர்ச்" "ஜியார்ஜ் மீவார்ட்" போன்றவர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட சித்தாந்தத்துக்காக மிகக் கடுமையுடன் நடத்தப்பட்டுக் கண்டிக்கப்பட்டனர். 1832-ம் ஆண்டில் சர்வகலாசாலைப் பட்டங்களை "ப்ரூஸ்டர்" "பாராடே" "டால்டன்" போன்ற விஞ்ஞான வித்தகருக்கு அளிக்கக் கூடாதென்று கேபிள் என்பவர் வாதாடினார். 1850-வது வருடம் பேர்லோனா என்னும் ஊரில் கூட்டப்போவதாக இருந்ததொரு விஞ்ஞான மகாநாட்டை அக்காலத்திய போப்பாகிய ஒன்பதாவது பயஸ் என்பவர் தடுத்துவிட்டார். மற்றும் கடவுளின் பிரதிநிதியாகிய அதே காருண்ய போப் "பிராணிகளின் கொடுமை விலக்குச் சங்கம்" ஒன்றை ஸ்தாபிக்கத் தனது சம்மதத்தை அளிக்க மறுத்துவிட்டார். அதன் காரணம் என்னவென்றால் பைபிளில் ஜீவப்பிராணிகளாகிய மிருகங்களுக்கு மக்கள் ஆற்றும் கடமையைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை என்பதாகும். இன்னும் ஆஸ்திரேலியாவிலே கணக்குச் சொல்லிக் கொடுக்குமுன் ஆசிரியர்கள் அனைவரும் தந்தையின்றி கிறிஸ்து பிறந்த விந்தையில் நம்பிக்கையுண்டு என சத்தியம் செய்யவேண்டுமாம். இவ்வாறு செய்தது, அந்த ஆபாசச் சத்தியம் அதிகாரிகள் மூலமாகவே கட்டாயப்படுத்தப்படுவதற்கு மூந்தியதாகும்.

# பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

| | | |
|---|---|---|
| ஏன் அடிமையானாள்? ... ... | ரூ. | 0 5 0 |
| பிரகிருதிவாதம் ... ... | ,, | 0 3 0 |

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

| | | |
|---|---|---|
| முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... | ,, | 0 5 0 |

Hon பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

| | | |
|---|---|---|
| நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... | ,, | 0 3 |
| மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ... | ,, | 0 3 0 |

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

| | | |
|---|---|---|
| மதம் என்றால் என்ன? ... ... | ,, | 0 3 0 |
| கடவுள் ... ... ... | ,, | 0 5 0 |
| நான் சமுதாயவாதியானதேன்? ... ... | ,, | 0 3 0 |
| வால்ட்டேர் ... ... ... | ,, | 0 4 0 |
| பேய்-பூதம்-பிசாசு ... ... | ,, | 0 3 0 |

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

| | | |
|---|---|---|
| மதமும் விஞ்ஞானமும் ... ... | ,, | 0 3 0 |
| பிரபஞ்ச உற்பத்தி ... ... ... | ,, | 0 3 0 |

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

| | | |
|---|---|---|
| மதப்புரட்சி ... ... ... | ,, | 0 4 0 |

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை

| | | |
|---|---|---|
| மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் 1-ம் பாகம் | | 0 6 0 |
| ஷை 2-ம் பாகம் | | 0 5 0 |

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

| | | |
|---|---|---|
| பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம் | | 0 4 0 |
| ஷை 2-ம் பாகம் | | 0 4 0 |

தோழர் அ. இராகவன் எழுதியது.

| | | |
|---|---|---|
| பெண்ணுரிமையும், மதமும் ... ... | ,, | 0 3 0 |

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

| | | |
|---|---|---|
| ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ... | ,, | 0 5 0 |
| மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நா. பி.) | | 0 4 0 |

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்) | 0 | 8 | 0 |
| 2. | லெனினும், மதமும் | 0 | 4 | 0 |
| 3. | பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 3 | 0 |
| 4. | கடவுளும், பிரபஞ்சமும் | 0 | 4 | 0 |
| 5. | உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை? | 0 | 1 | 0 |
| 6. | இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |
| 7. | ,, அயோத்தியா காண்டம் (200 பக்கம்) | 0 | 8 | 0 |
| 8. | ,, ஆரண்ய காண்டம் | 0 | 4 | 0 |
| 9. | ,, கிட்கிந்தா காண்டம் | 0 | 4 | 0 |
| 10. | ஞானசூரியன் (நான்காம் பதிப்பு) 200 பக்கம் | 0 | 5 | 0 |
| 11. | தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம் | 0 | 3 | 0 |
| 12. | மேயோ கூற்று மெய்யா? பொய்யா? | 0 | 3 | 0 |
| 13. | பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை | 0 | 4 | 0 |
| 14. | ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபந்யாசம் | 0 | 2 | 0 |
| 15. | அகத்தியர் ஆராய்ச்சி | 0 | 2 | [illegible] |
| 16. | இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு | 0 | 2 | 0 |
| 17. | [illegible] மூடநம்பிக்கை (இங்கிலீஷ்) | 0 | 2 | 0 |
| 18. | பர்னார்ட்ஷா உபந்யாசம் | 0 | 1 | 0 |
| 19. | சோஷலிஸம் | 0 | 2 | 0 |
| 20. | போல்ஷ்விக் முறை | 0 | 1 | 0 |
| 21. | ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம் | 0 | 0 | 6 |
| 22. | சமதர்ம உபந்யாசம் | 0 | 0 | 9 |
| 23. | சோதிட ஆராய்ச்சி | 0 | 4 | 0 |
| 24. | மனுநீதி விளக்கம் | 0 | 2 | 0 |
| 25. | மறுப்புக்கு மறுப்பு | 0 | 3 | 0 |
| 26. | பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்) | 0 | 4 | 0 |
| 27. | புது ரஷ்யா (200 பக்கம்) | 0 | 8 | 0 |
| 28. | புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன் | 0 | 8 | 0 |
| 29. | சர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| 30. | ராவணப் பெரியார் | 0 | 5 | 0 |
| 31. | இங்கர்சால் பொன்மொழிகள் | 0 | 4 | 0 |
| 32. | நரகம் எங்கே? | 0 | 2 | 0 |
| 33. | ஜாதியை ஒழிக்க வழி | 0 | 4 | 0 |
| 34. | கலைக்கியானம் அல்லது கைவல்யம் கட்டுரை | 0 | 5 | 0 |
| 35. | ஹிந்தி எதிர்ப்புப் பாடல்கள் | 0 | 2 | 0 |
| 36. | காரல் மார்க்ஸ் | 0 | 2 | 0 |
| 37. | மனிதன் என்றால் என்ன? | 0 | 6 | 0 |

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy
at the Unmaivilakkam Press, Erode.